39

**Political Science**
**Supplimentary Series 01**

GAQ

GCE (A/L)



# அரசறிவியல் கோட்பாடுகளும் எண்ணக்கருக்களும்

-புன்னியாமீன்-

1/9002
4216

11 MAR 1997
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
89
புத்தக நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

POLITICAL SCIENCE
SUPPLIMENTARY SERIES - 01

# G.C.E. (A/L)
# G.A.Q.

## அரசறிவியல் கோட்பாடுகளும் எண்ணக்கருக்களும்

21 மாதிரி வினாக்களையும்,
சுருக்க விடைகளையும் உள்ளடக்கியது

பீ. எம்.புன்னியாமீன் B.A.(S.L)

வெளியீடு:

**EPI புத்தகாலயம்**

64 - 2/2, Hinniappuhamy Mawatha
Kotahena, Colombo-13.

இணை வெளியீடு;

சிந்தனை வட்டம்
14, உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை 1212

119000

# அரசறிவியல் கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும்

(வினாக்களும் – சுருக்கவிடைகளும்)


ஆசிரியர் :- **பீ.எம். புன்னியாமீன்**

B.A(S.L) Dip in Journ, SLTS



| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | :- | Mrs Mazeeda Puniyameen<br>14, Udatalawinna, Madige,<br>Udatalawinna (1212) |
| முதலாம் பதிப்பு | :- | 1992 Jan |
| இரண்டாம் பதிப்பு | :- | 1993 Feb |
| முன்றாம் பதிப்பு | :- | 1994 March |
| நான்காம்பதிப்பு | :- | 1994 May |
| ஐந்தாம் பதிப்பு | :- | 1995 Sep |
| விலை | :- | [illegible] |
| கணணிப்பதிப்பு | :- | Pack Graphice<br>408, Galle Rd, Colombo -03. |
| அச்சுப்பதிப்பு | :- | MB Printers<br>L/G/S/04, Sri Sangaraja Mw,<br>Colombo- 10. |
| புத்தக அமைப்பு | :- | V. கிருஷ்ணமூர்த்தி<br>316, Galle Rd, Colombo -04. |




## மாதிரி வினாக்கள்

## தொகுக்கப்பட்ட பாட அலகுகள்


* அரசும் சுயேற்சை சங்கங்களும்
* தாராண்மைவாதக் கோட்பாடு
* சமவுடைமைக் கோட்பாடு ( சோசலிசக் கோட்பாடு)
* அரசியல் கலையா? விஞ்ஞானமா?
* உரிமைகள்
* இறைமைக்கோட்பாடுகள்
* சட்டம்
* பிரதிநிதித்துவ முறைகள்
* சமூக ஒப்பந்தக் கோட்பாடுகள்
* ஜனாதிபதி மந்திரிசபை ஆட்சிமுறைகள்
* ஒற்றையாட்சி, சமஷ்டியாட்சி முறைகள்
* அரசியல் திட்டங்கள்
* அதிகார பிரிவினைக் கோட்பாடு
* சமத்துவம்
* நீதித்துறை
* ஜனநாயகம்
* பாஸிஸம்
* பொதுசன அபிப்பிராயம்



ஆசிரியருடனான தொடர்புகளுக்கு

P.M.PUNIYAMEEN
14, UDATALAWINNA, MADIGE
UDATALAWINNA - 1212
SRI LANKA.

## க.பொ.த. (உயர்தர ) அல்லது முதற் கலைத் தேர்வு அரசறிவியல் எழுதப்போகும் உங்களுக்காக சில ஆலோசனைகள்...

1. பரீட்சை வினாப் பத்திரத்தைப் பெற்றவுடன் பதற்றப்படாதீர்கள். முதலில் நிதானமான முறையில் சகல வினாக்களையும் வாசித்துப் பாருங்கள்.
2. பின்னர் உங்களுக்கு இலகுவானதாகவும், பூரணமான விடையை எழுதக்கூடியதுமான ஐந்து வினாக்களைத்தெரிவு செய்துகொள்ளுங்கள் G.C.E.A.L என்றாலும் சரியே G.A.Q பரீட்சை என்றாலும் சரியே அரசறிவியல் வினாப்பத்திரம் மொத்தமாக பத்து வினாக்களைக் கொண்டிருக்கும். இந்தப் பத்து வினாக்களில் ஐந்து வினாக்களுக்கு மாத்திரமே விடையளித்தல் வேண்டும்.
3. நீங்கள் எழுதும் விடையைப் பாதியளவில் எழுதிவிட்டு பின்பு அவ் வினாவை வெட்டி மற்றுமொரு வினாவிற்கு விடையளிப் பதை இயன்றளவில் தவிர்த்துக்கொள்ளுங்கள் அரசியல் மூல தத்துவ கடந்த கால பரீட்சை விடைப்பத்திரங்களை நோக்குமிடத்து பல மாணவர்கள் இவ்வாறு செய்திருப்பதை அவதானிக்க முடிந்தது. இதற்கு மூல காரணம் மாணவர்கள் ஆரம்பத்திலே வினாக்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளாமை ஆகும். இவ்வாறு நீங்கள் செய்வது நேரத்தை விரயமாக்கும் என்பதைக் கருத்திற் கொள்க.
4. பரீட்சையில் நீங்கள் 5 வினாக்களுக்கு கட்டாயமாக விடையளித்தல் வேண்டும் 5 வினாக்களுக்கு விடையளிக்காது 3 அல்லது 4 வினாக் களுக்கு மாத்திரம் விடையளித்தால் நிச்சயமாக மொத்தப் புள்ளி யைக் குறைக்கச் செய்யும் எனவே கட்டாயமாக 5 வினாக்களுக்கும் விடையெழுத முயற்சித்தல் வேண்டும்.
5. பரீட்சையில் உங்களுக்குத் தரப்படும் நேரம் 3 மணித்தியாலங்கள் மட்டுமே. எனவே விடையெழுதும் போது 5 வினாக்களுக்கும்சம நேரத்தைஒதுக்க நீங்கள் எத்தனியுங்கள். ஒரு வினாவுக்கு அதிக நேரத்தை ஒதுக்குமிடத்து ஏனைய வினாக்களுக்கு ஒதுக்கும் நேரம் குறைவடையலாம் இதனால் பின்னர் எழுத வேண்டி விடைகளை உங்களால் பூரணப்படுத்த முடியாமற் போகலாம்.
6. எழுத்துத் தெளிவு மிகப் பிரதானமானதாகும் நீங்கள் எழுதிய விடைகளை பரீட்சகர் இலகுவாகவும் துல்லியமாகவும் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டியது அவசியமாகும்.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

7. G.C.E.(A/L) மாணவர்களாயின்

நீங்கள் எழுதுவது பல்கலைக்கழக நுழைவிற்கான ஒரு போட்டிப் பரீட்சை என்பதை மறந்துவிடாதீர்கள். குருவி கூடு கட்டும் போது நிச்சயமாக ஒரேயடியாகக் கட்டிவிட முடியாது. சிறுகச் சிறுக துரும்புகளை சேகரித்தே கூட்டைக் கட்டி முடிக்கிறது. இதே போல நீங்களும் ஒவ்வொரு புள்ளியாகச் சேகரிக்க முயல வேண்டும். வினாவுடன் தொடர்புடைய சிறு விடயங்களைக் கூடக் குறித்துக் காட்டுங்கள் இது ஓரிரு புள்ளிகளையாவது அதிகரித்துத்தர ஏதுவாகலாம். சில நேரங்களில் இவ்வோரிரு புள்ளிகளே உங்கள் பல்கலைக்கழக வாழ்வை நிச்சயிப்பதாகவும் அமையலாம்.

8. அரசியல் மூலதத்துவப் பாடத்தில் நீங்கள் எழுதும் விடைகள் பரந்த அடிப்படையில் அமைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உங்கள் விடைகளில் நீங்கள் கற்ற கோட்பாடுகளை மட்டும் எழுதாது நடைமுறை விடயங்களையும் அண்மைக்கால சம்பவங்களையும் எழுதுதல் வேண்டும் (வினாவின் தன்மைக்கேற்ப இவ்வாறு எழுதுவது அதிக புள்ளிகளைப் பெற்றுத்தரும் வாய்ப்பாக அமையும்.

9. G.A.Q. மாணவர்களும் விடையெழுதும் போது ஒழுங்கமைப்பு உதாரணங்கள் அணுகுமுறைகள் போன்றவற்றில் அதிக அக்கறை செலுத்துதல் வேண்டும்.

10. பரீட்சையைப் பற்றிய தயக்கத்தைவிட்டுவிடுங்கள். சந்திரமண்டலத்தில் பாதம் வைத்தவனும் எம்மைப்போன்ற மனிதனே. நவீன காலத்தில் மனிதன் எத்தனையோ படிகள் முன்னேறிச் சென்றுவிட்டான். இந் நிலையில் ஒரு சாதாரண பரீட்சையைச் சந்திக்க, முகங் கொடுக்க நாம் ஏன் அஞ்ச வேண்டும்?

துணிவுடனும் மன உறுதியுடனும் உங்கள் பயணத்தை தொடருங்கள். நிச்சயம் சிறந்த பெறுபேறுகள் உங்களுக்காகக் காத்திருக்கிறது.

உங்கள் வெற்றிக்கு
என் மனமார்ந்த பிரார்த்தனைகளும்
நல் வாழ்த்துக்களும்

அன்புடன்
உங்கள்
**புன்னியாமீன்**
7/10/95

**14 UDATALAWINNA MADIGE**
UDATALAWINNA - 1212
1995. Oct. 07.

பிரபல எழுத்தாளர்

**புன்னியாமீன்**

அவர்களின்

**12வது இலக்கிய நூல்**

**யாரோ**
**எவரோ**
**எம்மை ஆள.....**

(சிறுகதைத்தொகுதி)

**இந்தியாவில் பிரபல சஞ்சிகைகளான தாமரை, தீபம், கலைமகள், மற்றும் "தீ" போன்றவற்றில் இடம்பெற்ற தரமான எட்டு சிறுகதைகளின் தொகுப்பு.**

வெளியீடு

நர்மதா பதிப்பகம் - இந்தியா

இலங்கையில் ஏகவிநியோக உரிமை

**Poobalasingam Book Depot,**
Jaffna & Colombo
340, Sea Street,
Colombo-11 Tel: 422321.

தொடர்புகள்

**P.M. Puniyameen,**
14, Udatalawinna, Madige,
Udatalawinna 1212.



## வினா - 01

**சமுதாயத்தின் சுயேற்சைச் சங்கங்களுக்கும், அரசுக்குமிடையிலான வேறுபாடுகளை பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராய்க.**

**அ) அங்கத்துவம்   ஆ) நோக்கம்   இ)அதிகாரம்**

**சமூகத்தில் உள்ள அனைத்துச் சங்கங்களை விடவும் அரசு உயர்ந்த சங்கமாகும். இக் கூற்றை நீர் ஏற்பீரா?**
**உமது விடைக்கான நியாயங்களைத் தருக.**

### விடைக்குறிப்புகள்

**இக் கூற்றை ஏற்க முடியும்.**

நாடோடியாக வாழ்ந்த மனிதன் ஓரிட அமர்வின் பின்னர் ஒரு குடும்ப வாழ்க்கைக்கு உட்படுகிறான். காலகெதியில் குடும்பங்கள் பல இணைந்து சமூகமாக மாறுகையில் சமூகத்தில் உள்ள பிரச்சினைகளை தனியொருமனிதனால் நிறைவேற்ற முடியாது. எனவே சமூகப் பொதுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக வேண்டி மனிதன் பல அமைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டான்.

இவ்வாறு அமைத்துக் கொண்ட அமைப்புக்களில் அரசியல் ரீதியான பிரச்சினைகளை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்ட சங்கத்தை அரசு என்று அழைக்கின்றோம். ஏனைய நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட அமைப்புக்கள் சுயேற்சைச் சங்கங்கள் என அழைக்கப்படுகின்றன. பொது இலக்குகள் நோக்கங்களை அடைவதற்குத் தேவையான குறிப்பிட்ட ஒரு எல்லைக்குள் இறைமையுடன் கூடிய மக்கள் தொகுதியின் சங்கத்தை அரசு என்றும் அதே வேளை குறிப்பிட்ட நோக்கத்தை அல்லது இலக்கை அடைய விரும்புகின்ற ஒரு சிலரால் ஒன்று சேர்த்து அமைக்கப்பட்ட 'அமைப்பை சுயேற்சைச் சங்கங்கள் என்றும் அழைப்போம்.

இதிலிருந்து சமூகத்தில் காணப்படும் சங்கங்களைப் போலவே அரசும் ஒரு சங்கம் என்பது புலனாகின்றது. ஆனால் ஏனைய அனைத்து சுயேற்சைச் சங்கங்களை விடவும் அரசு உயரியதாகும். அதனை இவ்விரண்டிற்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

## வேறுபாடுகள்

| 1. உறுப்புரிமை அல்லது அங்கத்துவம் | |
|---|---|
| அரசு | சங்கம் |
| (அ) உறுப்புரிமை கட்டாயமானது. | கட்டாயமானது அல்ல. |
| (ஆ) எல்லா பிரஜைகளும் ஏதோ ஓர் அரசின் உறுப்பினர்களே. | விருப்பத்தைப் பொறுத்தது. |
| (இ) உறுப்புரிமையிலிருந்து விடுபடுவது கடினம். | விடுபடுவது கடினமானதல்ல அவன் மனோநிலையைப் பொறுத்ததே. |
| (ஈ) குடியுரிமை நீக்கப்பட்ட பிரஜை பிறிதொரு அரசில் அங்கத்துவம் பெறுவது கடினம். | ஒரு சங்கத்திலிருந்து விலகி பிறிதொன்றில் சேர்வது கடினமானதல்ல. |
| (உ) ஒரு நேரத்தில் ஓர் அரசில் மட்டுமே உறுப்புரிமை பெறலாம் | கட்டுப்பாடு இல்லை |

எனவே தொகுத்து நோக்குமிடத்து அங்கத்துவத்தைப் பொறுத்த மட்டில் அரசு என்பது சுயேற்சை சங்கங்களை விட உயர்ந்தது என்பது புலப்படும்.

| 02. அதிகாரம் | |
|---|---|
| அரசு | சங்கம் |
| (அ) இறைமை அதிகாரத்தைப் பெற்றது. எனவே ஆள் புல பிரதேசத்தில் உள்ள அனைத்து மக்களையும் ஆட்சி புரிகிறது. | அவ்வாறு முடியாது. |
| (ஆ) குற்றமிழைப்போர் அல்லது சட்டத்தை மீறுவோருக்கெதிராக உடல் அல்லது உள ரீதியான தண்டனையை வழங்கும் (மரண தண்டனை விதிக்கலாம்.) | கூடிய தண்டனை அங்கத் துவத்திலிருந்து நீக்குவதே. பாரதூரமான குற்றமிழைத்தால் அரசின் கருவியான நீதிமன்றத்தினுடாகவே தண்டனை வழங்க முடியும். |

இதிலிருந்து அரசு மிக உயர்ந்த சங்கம் என்பதைக் காணலாம். இங்கு அரசு உயர்ந்த அதிகாரத்தைப் பெற்றிருப்பதனால் அரசின் விருப்பிலேயே ஏனைய சங்கங்கள் தங்கியுள்ளன. தேசிய நலனுக்குப் பங்கம் விளைவிக்கும் எந்தச் சங்கத்தையும் அரசால் தடை செய்ய முடியும். எனவே அதன் படி பலவந்தத்தைப் பிரயோகிக்கக் கூடிய நிலையிலும் அரசு இருப்பதைக் காணலாம். ஏனைய சங்கங்களோ மரபு. நட்பு. அன்பு போன்றவற்றிலேயே தங்கியுள்ளது.



| 3. நோக்கம் | |
|---|---|
| அரசு | சங்கம் |
| (அ) அரசின் நோக்கம் பொதுவானது பரந்தது சமூகத்தின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதே இதன் பிரதான நோக்கமாகும். | குறுகியவை வரையறுக்கப்பட்டவை உ+ம் மகளிர் சங்கம் கூட்டுறவுச் சங்கம் |
| (ஆ) ஆள்புல பிரதேசத்தில் வாழும் சகல இன, மத, மொழி மக்களுக்கும் பாது காப்பு வழங்கி வளர்ச்சிக்கு உத்தரவாதமளிக்கிறது. | இன மத மொழி ரீதியாக மட்டுப்படுத்தப் பட்டிருக்கலாம் உ+ம் Y.M.M.A Y.M.B.A, Y.M.C.A Y.M.H.A |

இங்கு மனிதனின் பொதுத் தேவைகளை நிறைவேற்றி வைக்கின்ற ஒரு தாபனமாகவே அரசு செயல்படுகிறது. ஏனைய சங்கங்கள் மனிதனின் பல்தரப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதுடன் அரசுக்குத் துணையாகவே அமைக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து சுயேட்சைச் சங்கங்களை விட அரசு உயரியது என்பது புலனாகின்றது.

| 4. அதிகாரப் பரப்பு அல்லது எல்லை | |
|---|---|
| அரசு | சங்கம் |
| அரசு தனது எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலேயே தனது அதிகாரத்தைப் பிரயோகிக்கும். (ஆள்புலம் முக்கியம்) | வியாபகமானது |

சங்கம் சர்வதேச ரீதியாக அமைந்திருந்தாலும் கூட குறித்த அரசின் விருப்பிலேயே சங்கத்தின் செயற்பாடு தங்கியிருப்பதனால் சங்கத்தை விட அரசு உயரியது.

| 5. நிலைபேறானதன்மை | |
|---|---|
| சமூகம் உள்ளவரை அரசு நிலைத்திக்கும் | நோக்கம் நிறைவேற்றப்பட்ட பின் சங்கம் ஸ்தம்பிதம் அடைந்துவிடும் |

எனவே மேற்படி விடயங்களைத் தொகுத்து நோக்குமிடத்து சமூகத்திலுள்ள ஏனைய சுயேற்சைச் சங்கங்களை விட அரசு உயரியதென்பது புலப்படுகிறது.



119002

## வினா _ 02

அரசு பற்றிய தாராண்மைவாத, சோசலிசவாத கருத்துக்களை நுணுக்கமாக ஆராய்க.

பின்வருவன பற்றிக் கருத்துரை வழங்குக.
(அ) அரசு என்பது பொது நலன் பேணும் ஓர் அமைப்பாகும்.
(ஆ) அரசு என்பது ஒரு வர்க்கத்தின் கருவியாகும்.

## விடைக் குறிப்புக்கள்

### அ) அரசு என்பது பொது நலன் பேணும் அமைப்பாகும்

இக் கருத்தானது அரசு பற்றிய தாராண்மைவாதக் கருத்தாகும் தாராண்மை ஜனநாயகவாதிகள் பிற்காலத்தில் ஏற்பட்ட பொருளாதார சமூக மாற்றங்களைக் கருத்திற் கொண்டு அரசின் தன்மை பற்றி விளக்குகையில் அரசை ஒரு பொது நலன் பேணும் அமைப்பாகவே விளக்கினர்.

15ம் நூற்றாண்டிலிருந்து சிறுகச் சிறுக அபிவிருத்தியடைந்துவந்த முதலாளித்துவப் பொருளாதார முறையின் கீழ் தோற்றம் பெற்ற அரசியல் பற்றிய கருத்துக்கள் தாராண்மைவாதக் கருத்துக்களாகவுள்ளன. என பேராசிரியர் ஹெரல்ட் லஸ்கி குறிப்பிடுகின்றார்.

பழைய தாராண்மை வாதிகளின் கருத்துப்படி மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இச் சுதந்திரமானது சிந்திப்பதற்கும், செயற்படுவதற்கும், கருத்துக்களை வெளியிடுவதற்கும் , சங்கங்கள் அமைப்பதற்கும், சொத்துக்களைச் சேமிப்பதற்கும், சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் உரிமையை வழங்க வேண்டும் என்பதுமாகும். குறிப்பாக சொத்துக்களை வைத்திருக்கவும்., சொத்துக்களைச் சேமிக்கவும் அவற்றைப் பாதுகாக்கவும் உறுதியளித்தல் வேண்டும் . பிரசைகளைப் பொருத்தமட்டில் மிகவும் உயரிய மட்டத்தில் அவர்களது சுதந்திரத்தை அனுபவிக்க இடம் வழங்கப்படல் வேண்டும் .என்பது பழைய தாராண்மைவாதிகளின் அடிப்படைக் கருத்துக்களாகும். மேற்படி அம்சங்களினடிப்படையில் அரசானது சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்கும் ஓர் அமைப்பாகவே செயற்படல் வேண்டும்.

இவர்களால் இனம் காட்டப்பட்டஅரசின் தன்மையைக் கொண்டு காணர் எனும் அரசியலறிஞர் ஒரு பொலிஸ் வீரனுக்குரிய பணிப்புடன் சமப்படுத்தி அரசின் பணிகளை எடுத்துக்கட்டியுள்ளார்.



19 ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தில் சமவுடைமை வாதக் கருத்துக்களும் பரவலாயிற்று. இந் நிலையில் அரசு சட்டத்தையும் சமூகப் பாதுகாப்பினையும் ஏற்படுத்தும் என்ற கூற்று தளர்வடையலாயிற்று.

வேகமாக வளர்ச்சி கண்ட கைத்தொழில் மயமாக்கல் நகரமயமாக்கல் ஆகியவற்றின் விளைவாகப் பொருளாதார சமூக ஏற்றத் தாழ்வுகள் இடம்பெற்றன. மேலும் சொத்துக்கள் குறைந்த , சொத்துக்கள் இல்லாத, குறைந்த வருமானத்தைப்பெறும் தொழிலாளர் வர்க்கத்தினர் கணிசமான சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கலாயினர்.

இந் நிலையில் முதலாளித்துவத்தினூடாக தாராண்மை வாதக் கருத்துக்களை, கட்டிக் காக்க வேண்டுமாயின் தமது அடிப்படை கருத்துக்களிலும் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வது அவசியமானதாகும். என்பதை உணர்த்த, தாராண்மை வாதிகள் அரசு என்பது பொது நலன் பேணும் அமைப்பாகும் என்ற கருத்தினை முன்வைத்தனர். இது அரசு பற்றிய புதிய தாராண்மைக் கருத்தெனக் கருதப்படுகின்றது. தாராண்மைவாதம் முதலாளிகளின் நல உரிமைகளை மட்டும் அல்ல பொதுமக்களினதும் நல உரிமைகளைப் பேணும், ஓர் அமைப்பு என இனங்காட்டத் தலைப்பட்டுள்ளது. பொதுமக்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தி அரசின் பொதுநலத் தன்மைகளையும் அபிவிருத்தி செய்யத்தக்க இந்தத் தாராண்மை வாதிகளின் மத்தியில் ஜெரமி பென்தம், ஜோன் ஸ்டுவாட் மில் என்போர் முக்கியமானவர்கள்.

அரசானது சமூக பொருளாதார நல உரிமைக்காகச் செயற்பட வேண்டும் என்பதுடன் இது ஒரு பொதுநலன் பேணும் அமைப்பாகக் கருத்திற் கொள்ளப்பட்டது. பிரசைகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவே அரசு அமைக்கப்பட்டுள்ளது. எனவே பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை களைதல் , பொதுநல சேவைகளை வழங்குதல், குறைந்த வருமானம் பெறுவோருக்கு மானியங்களை வழங்குதல், போன்றவற்றைச் சட்டரீதியாகவும், செயற்பாட்டு ரீதியாகவும் புரியும் நிறுவனமாக அரசை இனங்காட்டினார்.

மேற்படி நிலைமைகளை அவதானிக்குமிடத்து அரசானது சட்டத்தையும் சமூகப் பாதுகாப்பினையும் மேற்கொள்ளும் பொது நலன் பேணும் அமைப்பு என்பது நவீன தாராண்மைவாதிகளின் கூற்றாக அமைந்துள்ளது. என்பதை நியாயப்படுத்தலாம்.



119002

## (ஆ) அரசு என்பது ஒரு வர்க்கத்தின் கருவியாகும்

இக் கருத்தானது சோசலிசக் கொள்கையின் அடிப்படையில் முன் வைக்கப்பட்ட ஒன்றாக இனங்காணலாம். கால்மாக்ஸ், ஏங்கல்ஸ். ஆகியோர் இவை பற்றித் தெளிவான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். கால கெதியில் (1917ரஸ்யப் புரட்சியின் பின்பு ) லெனினினால் இக் கருத்துக்கள் பிரபல்யமடைலாயிற்று.

அரசின் தோற்றம் தன்மை என்பன வர்க்க நலனை அடிப்படையாகக் கொண்டதே, சமூகத்தில் பலம் பொருந்திய வர்க்கம் பலம் குறைந்த வர்க்கத்தை அடக்கியாள மேற்கொள்ளப்பட்ட வழி முறையே அரசாகும் . எனவே பலம் பொருந்திய வர்க்கத்தின் நல உரிமைகளைப் பேணிக் கொள்ளத்தக்க வகையில் ஏற்படுத்தப்பட்டதே அரசாகும்.

சோசலிசக் கருத்துக்களைப் பற்றி சற்று விரிவாக ஆராய்கையில் இயக்கவியல் பொருள் முதல் வாதத்தின் அடிப்படையில் வரலாற்று மாற்றங்களை விளக்குகின்ற கால்மாக்ஸ் வரலாற்று மாற்றங்கள் தனித்து பொருளாதாரக் காரணிகளாலே நிர்ணயிக்கப்படுகின்றன என்றும் வரலாற்று மாற்றங்களுக்குப் பின்னணியாகப் பொருளாதாரக் காரணிகளே அமைகின்றன என்றும் முன்வைக்கின்ற அடிப்படையிலேயே அரசு என்ற நிறுவனத்தின் தோற்றம் தன்மை என்பவற்றை விளக்க முற்படுகிறார்.

வரலாற்றுப், பொருளாதாரக் காரணியான சொத்துடைமையின் தோற்றம் அதன் வளர்ச்சி, அதனால் சமூகத்தில் அடையாளம் காணக்கூடியதாகவிருந்த வர்க்க முறை இதனால் விரிவடைந்து வந்த வர்க்க முரண்பாடு என்பவற்றின் அடிப்படையில் அரசு என்ற நிறுவனத்தின் தோற்றத்தைக் விளக்குவதாக இக் கோட்பாடு அமைகிறது.

அரசு என்பது வர்க்க முரண்பாட்டினால் நிர்ணயிக்கப்படுவதால் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தினால் நிலைநாட்டப்பட்ட முறைகளைப் பாதுகாக்கும் ஒரு கருவியாகவும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களைக் கீழ் படுத்தி அடக்குவதற்காக ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தால் பயன் படுத்தப்படும் ஒரு கருவியாகவும் விளங்குகிறதென்றும், இதனால் அரசு என்ற அமைப்பின் வெளிப்படையான பிரதான அம்சங்களாக பலாத்காரமும் அடக்குமுறையும் விளங்குகின்றன என்பதே இக் கோட்பாட்டின் சாராம்சமாகும்.



### வரலாறு பற்றிய கார்ல்மாக்ஸின் பிரிவுகளாவன

| | |
|---|---|
| 01. புராதன கம்யூனிச சமுதாயம் | 02. அடிமைமுறைச் சமுதாயம் |
| 03 மானியமுறைச்சமுதாயம் | 04. முதலாளித்துவச் சமுதாயம் |

இந்த அமைப்புக்களில் எல்லாம் பொருளாதார, சொத்துப் பலம் பொருந்திய வர்க்கமே ஆட்சிப் பொறுப்பாளர்களாகக் காணப் பட்டமையும், தமது வர்க்க நலவுரிமைகளைப் பேணிக் கொள்ள மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் அரசு ஒரு வர்க்கத்தின் நலன் பேணும் கருவி என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

முதலாளித்துவ அரசு வடிவத்தில் பெரும்பாலும் தன்னை ஒரு மக்களாட்சி அரசாகக் காட்டிக்கொள்ள எத்தனித்தாலும் அது ஒரு வர்க்கத்தின் நலன் பேணும் கருவியே, முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியை மறைக்கும் முகமூடியே. அங்கு காணப்படும் ஜனநாயகம் என்பது வெறும் பாசாங்கு மட்டுமே என்பது சோசலிச வாதிகளின் கருத்தாகும்.

### வினா _ 03

**அரசியல் ஒரு விஞ்ஞானமாகும் இக் கருத்தை நீர் ஏற்பீரா?**
**உமது விடைக்கான நியாயங்களைத் தருக.**

**அரசியல் என்பது கலையைப் போலவே ஒரு விஞ்ஞானமாகும். ஆராய்க.**

### விடைக்குறிப்புக்கள்

அரசறிவியல் ஒரு கலையா? விஞ்ஞானமா? என்ற வினா காலங் காலமாக முன் வைக்கப்பட்டு வருகின்றது. அரசறிவியல் ஒரு கலை என்றும், ஒரு விஞ்ஞானம் என்றும் இருபக்க நியாயங்கள் முன் வைக்கப்பட்டு வந்துள்ளன. அரசறிவியல் ஒரு கலை என்பதில் பெருமளவில் முரண்பட்டுக் கொள்ளாத அரசறிவியல் அறிஞர்கள் அது ஒரு விஞ்ஞானமா என்ற நிலையில் நிறையவே சர்ச்சைப்படுகின்றனர். தற்கால திட்டமிட்ட ஆய்வு முறையாக இது வளர்ச்சியடைந்த போது அரசியல் ஒரு விஞ்ஞானமாகவே கணிக்கப்படுகிறது. அரசறிவியல் விஞ்ஞானத் தத்துவங்களைத் தெரிந்து கொள்ள முன்பு விஞ்ஞானம் என்றால் என்ன? விஞ்ஞானக் கற்கைகள் என்ன? என்பதை அறிதல் வேண்டும் இவற்றை ஒப்பிடுவதன் மூலம் அரசியல் ஒரு கலையா? விஞ்ஞானமா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

**விஞ்ஞானம்**

| இயற்கை விஞ்ஞானம் | சமூகவிஞ்ஞானம் |
|---|---|
| (பௌதீகரீதியான ஆய்வு) | (மனித நடத்தைபற்றியஆய்வு) |
| உ+ம் இரசாயனவியல், பௌதிகவியல், விலங்கியல். | பொருளியல், அரசறிவியல், சமூகவியல். |

### இயற்கை விஞ்ஞானத்தின் கற்கை நெறிகள்

(அ) அவதானித்தல் (ஆ) வகைப்படுத்தலும் பரிசோதனையும்
(இ) ஒப்பிடுதல் (ஈ) தீர்மானித்தல்
(உ) தீர்மானங்களுக்கிணங்க தேற்றம் ,விதி, கோட்பாடுகளினூடாக எதிர்வுகூறல்

மேற்படி படிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு விஞ்ஞானக் கற்கை முறை பற்றிய உதாரணமொன்றையும் (உ+ம் எயிட்ஸ் நோய்) அரசறிவியல் நடத்தை தொடர்பான உதாரணமொன்றையும் (உ+ம் அரசியல் வன்முறை) தொடர்புபடுத்தலாம். இரண்டு கற்கை நெறிகளும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டிருப்பதால் அரசறிவியலையும் ஒரு விஞ்ஞானமெனலாம். *1948 செப்டம்பரில் பரீஸ் நகரின் யுனெஸ்கோ அலுவலகத்தில் (UNESCO House-Paris) ஒன்று கூடிய உலகின் மிக முக்கியமான அரசறிவியல் அறிஞர்கள் அரசறிவியலை அரசியல் விஞ்ஞானம் எனும் (Political Science) சொற்பிரயோகத்தைப் பொதுவாக ஏற்றுக் கொண்டனர்.

### கலை என வாதிடுவோர் (விஞ்ஞானம் இல்லையென வாதிடுவோர்)

01.விஞ்ஞானத்தின் குறியீடுகள் வார்த்தைகள் உறுதியான கருத்துடையவை. உதாரணமாக விஞ்ஞானத்தில் $H_2o$ (நீர்) O2 (ஒட்சிசன்) இக் கருத்துக்களோ விளக்கங்களோ. மாற்றமடையாது. ஆனால் அரசறிவியலில் அது போன்ற உறுதியான கருத்துக்களைக் காண முடியாது. உதாரணம் அரசு, அதிகாரம். இவற்றிற்குப் பல கருத்துக்கள் , பல விளக்கங்கள் காணப்படுகின்றன. அதே நேரம் இவை அடிக்கடி மாற்றமடையும் - எனவே அரசறிவியல் விஞ்ஞானமல்ல.

02. **விஞ்ஞானக் கோட்பாடுகள் இறுதியானவை**
உதாரணம் :- விஞ்ஞானம்- புவியீர்ப்புக் கோட்பாடு, ஆக்கிமிடிசின் கோட்பாடு இவை எக்காலத்திற்கும் பொருந்தும் மாற்றமடையாது. ஆனால் அரசறிவியல்கோட்பாடுகள் அப்படியல்ல
உதாரணம்-:- அரசு பற்றிய கோட்பாடுகள், யாப்புகள், இவை எக்காலத்திற்கும் பொருத்தமற்றது காலமாற்றத்திற்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப மாற்றமுறலாம்.

03. விஞ்ஞானம்- - பரிசோதனைச்சாலையில் பரிசோதனைக்குட்பட்டே தீர்மானங்கள் பெறப்படும். எனவே உறுதியானது.
அரசறிவியல் பரிசோதனைக்கூடத்தில் ஆய்வுக்குட்படுத்த முடியாது கருத்துப்பொருள் சார்ந்தது.

**பொது**

எவ்வாறாயினும் அரசறிவியலைத் தூய விஞ்ஞானம் என்று கூறுவதை விட விஞ்ஞானத்துக்குரிய ஆராய்ச்சிப் பண்புகளைக் கூடிய அளவில் கொண்டுள்ள ஒரு கலையாகக் காணப்படுகின்றது என்று கூறலாம். இவ் வேளையில் ஒக்ஸ்போட் ஆங்கில அகராதி அரசறிவியல் எனும் வார்த்தைப் பதத்திற்கு பின்வருமாறு விளக்கம் கூறுகிறது. **அரசறிவியல் என்பது அராசாங்கம் பற்றிய கலையும் விஞ்ஞானமுமாகும்.**



### வினா - 04

**உரிமைகள் Rights மூன்றினையும் இனங்கண்டு அவை பற்றி விளக்குக.**

### விடைக்குறிப்புகள்

ஓர் அரசியல் சமூகத்தில் ஒன்றாகக்கூடும் மக்கள் ஒரு சிறந்த வாழ்க்கையை அனுபவிப்பதற்காக அவர்கள் மனித செயற்பாடு சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சில விதிகளைப் பின்பற்ற விரும்புகின்றனர்.அவர்கள் சில தடைகளையும் , பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்கின்றனர் . வேறு வார்த்தையில் கூறினால் அவர்கள் தமது தனிப்பட்ட சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கும் அதே வேளை சமூகத்தில் சகலரதும் உயர் சுதந்திரத்தை அபிவிருத்தி செய்து, கொண்டு நடாத்துவதற்கான வாய்ப்பினையும் பெற்றிருக்க வேண்டும் . இதன் காரணமாக அச் சமூகத்தில் உரிமைகள் அத்தியாவசியமாக வேண்டி நிற்கின்றன.

உரிமை என்பது ஒரு நிலையான பொருளைக் கொண்டிருக்கவில்லை அரசறிவியலாளர்களும் தத்துவஞானிகளும் பல விடயங்களை விளக்குவதற்கு உரிமை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர்.

பேராசிரியர் லஸ்கியின் கருத்துப்படி **"மனிதன் தானாகவே பொதுவானவகையில் அடைந்து கொள்ள முடியாதவற்றைத் தவிர்ந்த சமூக வாழ்க்கையின் நிலைகளே உரிமைகள்"** ஆகும் என்கின்றார். அதாவது மனிதன் ஓர் அரசியல் பிராணி என்ற வகையில் தமது ஆளுமையை அபிவிருத்தி செய்யத் தேவையான சூழ் நிலையை ஏற்படுத்திக் கொடுத்தல் அரசின் கடமையாகும்.

அரசு உத்தரவாதமளிக்கும் உரிமைகள் அரசியல் வாழ்க்கையில் தனிமனிதனின் வளர்ச்சியை விருத்தி செய்வதற்கான வாய்ப்பினைக் கொடுக்கின்றன. பொதுவாக நோக்குமிடத்து உரிமைகள் தனி மனிதனின் உரித்தாகும். இந்த உரித்து சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். அதே நேரம் இவுரிமைகள் அரசியல் ஏற்றுக்கொள்ளலையும் பெற்றிருக்க வேண்டும்.

பொதுவாக உரிமைகளைப் பின்வரும் மூன்று பிரதான தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தலாம்.

1. சிவில் உரிமை (Civil Rights)
2. பொருளாதார உரிமை ( Economic Rights)
3. அரசியல் உரிமை (Political Rights)



119002

### 1. சிவில் உரிமை (Civil Rights)

இது சமூக வாழ்க்கைக்கான நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. அதே நேரம் நாகரிக வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதால் அவை சிவில் உரிமை என்று அழைக்கப்படுகின்றது.

ஜனநாயக அரசுகளிலே சிவில் உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்படுகின்றன எவ்வாறாயினும் எல்லா நவீன அரசுகளும் உரிமைகள் சம்பந்தப்பட்ட ஒரு பொதுவான பட்டியலைக் கொண்டிருப்பதில்லை. சிவில் உரிமைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**அ). வாழும் உரிமை:**

சகல உரிமைகளிலும் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கான உரிமையே மிகவும் முக்கியமானதாகும் . இவ்வுரிமையின்றி மனிதனால் ஏனைய உரிமைகளை அனுபவிக்க முடியாது.

**ஆ). கருத்து வெளியீட்டுரிமையும் சிந்தனை செய்யும் உரிமையும்**

இது மனித உரிமைகளில் மிக முக்கியம் வாய்ந்ததாகும். விசேட மாகப் பத்திரிகைச்சுதந்திரம் பேச்சுச் சுதந்திரம் போன்றனஇங்கு உள்ளடக்கப்படுகிறது. கருத்து வெளியீட்டுச் சுதந்திரம் இல்லாவிடின் சிந்தனை செய்யும் சுதந்திரத்தின் பொருள் அற்றுப்போகும் . பேச்சுச் சுதந்திரமும் கருத்து வெளியீட்டுச் சுதந்திரமும் ஒரு மனிதனின் ஆளுமையை அபிவிருத்தி செய்கின்றன. ஒரு மனிதனின் பேச்சுச் சுதந்திரத்தினால் அவன் மட்டுமன்றி சமூகமும் அரசாங்கமும் பயனைப் பெறுகின்றன.

**இ). நம்பிக்கையைப் பின்பற்றும் உரிமையும் மத உரிமையும்**

ஜனநாயக மரபு உரிமைகளுள் சமய சுதந்திரமும் ஒன்றாகும் சகல பிரஜைகளுக்கும் தமது நம்பிக்கையைப் பின்பற்றும் சுதந்திரமும் சமய சுதந்திரமும் வழங்கப்பட்டிருக்க வேண்டும் . அவர்கள் விரும்பும் வணக்கங்களை செய்யும் சுதந்திரம் வழங்கப்படல் வேண்டும். ஆனால் அவ் வணக்கங்கள் ஒழுக்கவியலுக்கும், பொதுச் சுகாதாரத்திற்கும் முரணானவையாக இருக்கக் கூடாது. அரசு சமய விடயங்களில் பாரபட்சங்களைக் காட்டக்கூடாது. அது குறிப்பிட்ட சமூகத்திற்கு பிரத்தியேக சலுகைகளை வழங்கவும் கூடாது.

**ஈ). ஒன்று கூடுவதற்கான உரிமை**

சங்கங்களை அமைக்கும் உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முக்கிய உரிமையாகும் மேலும்

**உ). சமத்துவ உரிமை ஊ). குடும்பஉரிமை எ). கல்வி உரிமை**

**ஏ). தனிமனித சுதந்திரத்திற்கான உரிமை என்பனவும் சிவில் உரிமைகளுள் முக்கியத்துவம் பெறும் உரிமைகளாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன.**



### 2. பொருளாதார உரிமை (Economic Rights)

இது சிவில் உரிமையில் ஒரு முக்கியமான உரிமையாகக் காணப்படுகிறது. விசேடமாகப் பொருளாதார உரிமையை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

அ) சொத்துக்களை வைத்திருப்பதற்கான உரிமை

ஆ) விரும்பிய தொழிலைப் புரிவதற்கான உரிமை

(சோஷலிஸவாதிகள் இவ்வுரிமையை ஏற்பதில்லை)

### 3. அரசியல் உரிமை (Political Rights)

அரசியல் உரிமைகள் சிவில் உரிமைகளுக்கு ஆதாரமானவையாகும். அரசியலில் பங்கு பற்றுதல் என்பது ஜனநாயகத்தில் தவிர்க்க முடியாத அரசியல் உரிமையாகும்.. இவ்வுரிமையானது பிரஜைகள் அனைவருக்கும் அரசியலில் பங்குபற்றுவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது . இவை அரசியல் மனிதனின் அபிவிருத்திக்காக அரசு வழங்கும் ஒரு அத்தியாவசியமான நிலைப்பாடாகும் . சமூகத்தில் ஒருவன் நல்ல பிரஜையாக வாழ இந்த அரசியல் உரிமை மிக முக்கியமானதாகும். அரசியல் உரிமைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

அ) வாக்களிக்கும் உரிமை.

ஆ) போட்டியிடும் உரிமை

இ) பொதுப் பதவிகளை வகிக்கும் உரிமை .

ஈ) மனுச் செய்யும் உரிமை.

உ) அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை

இவற்றை முக்கியமான அரசியல் உரிமைகளாக இனம் காட்டலாம்.

## வினா - 05

**இறைமைக் (Sovereignty) கோட்பாடுகள் பற்றி நுணுக்கமாக ஆராய்க.**

## விடைக் குறிப்புகள்

அரசியலில் மிகவும் முக்கியமான ஓர் அடிப்படை எண்ணக்கருவாக இறைமை விளங்குகின்ற போதிலும் கூட அதன் பண்புகளைத் தெளிவாக்குவதிலும், வரையறுத்துக் கொள்வதிலும் கருத்து முரண்பாடுகள் பல காணப்படுகின்றன.

எளிய நடையில் கூறுவதாயின் இறைமை என்பது உயர்ந்த அதிகாரம் **Supreme Power** என்று பொருள்படும். இறைமை சம்பந்தமாக சில வரை விலக்கணங்களைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்

அ) ஓர் அரசின் உயர்ந்த நோக்கமே இறைமை ஆகும். - **வில்லோபி.**

ஆ) ஓர் அரசு சட்டங்களை உருவாக்கவும் அதனை நடைமுறைப்படுத்தவும் கொண்டிருக்கும் அதிகாரமே இறைமை எனப்படும். - **வூட்ரோ வில்சன்.**

இ) ஓர் அரசு தனது மக்கள் மீதும் அம் மக்களின் நிறுவனங்கள் மீதும் செலுத்துகின்ற சுயமானதும், நிறைவானதும் எல்லையற்றதுமான அதிகாரமே இறைமையாகும். - **பேர்காஸ்.**

எனவே உயர்ந்த அதிகாரம் என்பதை உணர்த்தும் இறைமை அரசு கொண்டிருக்கும் சட்டவாக்கம் , நிர்வாகம், நீதி பரிபாலனம் ஆகிய அதிகாரங்கள் அவற்றின் மேலாண்மை என்பவற்றைப் பொருள் கொண்டிருக்கும் இறைமையின் பரிமாணமே அவ்வரசுகளின் தன்மைகளையும் நிர்ணயிக்கும் என்பதால் அரசு அரசாங்கம் தொடர்பான கற்கைத் துறையில் இறைமை பற்றிய சிந்தனைகள் முக்கியம் பெறுகின்றன.

இறைமையின் உறைவிடம் தன்மை போன்றவற்றில் பலவிதமான கருத்து முரண்பாடுகள் காணப்படுவதினால் இறைமை பற்றிய கோட்பாடுகளை ஆராய்வதன் மூலம் இறைமையின் பரிமாணங்களைப் புரிந்து கொள்ள முடியும். இக் கோட்பாடுகள் அனைத்தும் போல மறுமலர்ச்சிக் காலத்தில் முன் வைக்கப்பட்டவையே.

## சில இறைமைக் கோட்பாடுகள்

### ஜீன் போடின் (Jean Boadin - 1530-1596)

நூல் குடியரசு ( The Republick - 1576)

இறைமை பற்றிய ஆரம்ப கோட்பாடாக இவரின் கோட்பாடு கருதப்படுகிறது. இவரின் கருத்துப் படி மக்கள் மீதும் குடிகள் மீதும் செலுத்தப்படுகின்ற எவ்விதமான சட்டங்களினாலும் தனதாக்கமுடியாத மிக உயர்ந்த அரசின் அதிகாரமே இறைமையாகும் இதன் படி இறைமையின் உறைவிடம் அரசனே.

சட்டங்கள் உருவாக்கப்பட்டு ஆட்சி நடத்தப்படும் போது ஓர் அரசினுடைய சட்டங்களை உருவாக்குவதும் அதனை அமுலாக்குவதும் அரசின் இறைமை என்பதினால் இறைமை சட்டத்தினை விட மேலானது. இருப்பினும் சமுதாயக் கடமை , சமூகப் பொறுப்பு, சமுதாய நீதி சர்வதேச சட்டம் என்பவற்றிற்கு மேலானது அல்ல என்று அவர் குறிப்பிடுகிறார்.

### தோமஸ் ஹொப்ஸ் (Thomas Hobbes - 1583-1679)

**நூல் - டிகேவ்**

சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளரான இவர் **நிபந்தனை எதுவுமின்றி மக்கள் தமது அதிகாரங்களை மன்னனிடம் ஒப்படைத்து விடுவதினால் மன்னனே இறைமைமிக்கவன்** என்கின்றார்.

இறைமையின் உறைவிடமாக மன்னனைக் காணும் ஹொப்ஸ் ஏனையவர்களிடம் இறைமை பிரிக்கப்படுவதை விரும்பவில்லை, எனவே தான் மன்னனின் ஆட்சி முறை கொடுங்கோண்மை மிக்கதாயினும் அதனை மக்கள் மாற்றியமைக்கக் கூடாது என இவர் கருதுகிறார். எனவே ஹொப்ஸின் பார்வையில் இறைமை முழு நிறைவானதும் சர்வ வல்லமை உடையதும் நிரந்தரமானதும் சர்வ வியாபகமுடையதுமாகும்.



### ஜோன் லொக் (John Locke 1632 - 1704)

நூல் - **அரசாங்கத்தின் இரண்டு உடன்படிகைகள்**

இவர் இறைமை எனும் பதத்தை நேரடியாகப் பயன்படுத்தவில்லை, உயர் அதிகாரம் (Supreme Power) எனும் வார்த்தையே பிரயோகித்துள்ளார். **இந்த உயர்ந்த அதிகாரமானது சட்ட மன்றம் மக்கள் என்று இரண்டு வேறுபட்ட மட்டங்களில் ஊற்றெடுக்கின்றன.** இருப்பினும் உயர் அதிகாரமாக மக்களைக் காண்கின்ற லொக் சகல அதிகாரங்களினதும் பிரிக்க முடியாத மூலங்களாக மக்களே விளங்குகின்றனர் என்ற கருத்தை முதன்மைப்படுத்துகின்றார்.

### ரூசோ (Jeaen Jaccquoes Rousseav 1712 - 1778)

நூல் - **சமூக ஒப்பந்தம்**

இவரின் கருத்துப்படி **இறைமை முழு நிறைவானதும் நிச்சயமானதும் பாராதீனப்படுத்த முடியாததும், ஐக்கியமானதும், பிரதிநிதித்துவமுடையதுமான ஒன்றாகும்.** அதாவது இவர் இறைமை முழு நிறைவானது எனக் கூறினாலும் இறைமையின் உறைவிடமாகப் பொது விருப்பத்தையும், மக்களையுமே காண்கிறார்கள்.

இங்கு பொது விருப்பு என்பது சமுதாயத்தின் பொது நன்மை என்பதாகப் பொருள் கொள்ளப்படுகிறது. தவிர பொது விருப்பு என்பது எல்லோருடைய எல்லா விருப்புக்களையும் குறித்து நிற்கவில்லை. பொது நன்மையினாலும் தனி நபர் விருப்பங்களின் இணைப்பு பொது விருப்பாகக் கொள்ளப்படுகிறது. அப் பொது விருப்பின் பிரயோகமானது எப்போதும் பெரும்பான்மை மக்களினால் தெரிவு செய்யப்பட்ட இறைமையாளனிடமே இருக்கும் என்பதே ரூசோவின் கருத்தாகும். இதனால் இறைமையைப் பாராதீனப் படுத்த முடியாது.

மேலும் ரூசோ அரசாங்கத்தினதும் அதன் அதிகாரத்தினதும் நிரந்தரத் தன்மையை ஏற்றுக்கொள்ள்வில்லை , மக்கள், தாமாகவே செய்துகொள்ளும் ஒப்பந்தமே இறைமையாளனைத் தோற்றுவிக்கும் என்றும் அதனால் அரசாங்கம் என்பது மக்களின் சேவகனே என்றும், மக்களின் கோரிக்கைகள், தேவைகளின் அடிப்படையில் தான் தங்கியுள்ளதென்றும் கூறுகின்றார்.

### ஜோன் ஒஸ்ரீன் (John Austin)

**நூல் - சட்டவியலுக்கான விளக்கவுரை** (Lectures on Jurisprudence)

இவரின் கருத்தின் சாரமானது **நிர்ணயம் செய்யப்பட்ட மேலான மனிதன் ஏனைய மேலானவர்களிடமிருந்து வரும் கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமலும் அவனுடைய கட்டளைகளுக்கு சமுதாயத்தின் பெரும்பாலானோர் வழக்கமாகக் கீழ்படிவதனாலும் அந்த மனிதன் அச் சமூகத்தில் இறைமையாளன் எனக் கருதப்பட வேண்டும் அந்த மேலான மனிதனையும் உள்ளடக்கிய அச் சமூகம் சுதந்திரம் பெற்ற அரசியல் சமூகமாகும்.**

இக் கோட்பாட்டினூடாக இறைமை அதன் தன்மை அதன் உறைவிடம் அதன் ஆதிக்க எல்லை என்பவற்றை **ஒஸ்ரீன்** தெளிவாக்குகின்றார்.

இறைமையாளனின் அதிகாரம் சட்ட ரீதியானதும் முழு நிறைவானதும் எல்லையற்றதும் என்று கூறுகின்ற ஒஸ்ரீன் இறைமை பிரிக்கப்பட முடியாது என்பதைத் தெளிவாக்கியதுடன் இரண்டு நபர்களுக்கிடையில் வேறான முறையில் செயல்படுத்தக்கூடியதல்ல என்றும் இதனால் ஒருவர் ஏனையவர்களைக் கட்டுப்படுத்த முடியுமாயின் அதுவே உண்மையான இறைமை என்றும் கூறுவதன் மூலம் இறைமையின் இயல்புகளை இவர் தெளிவாக்குகின்றார்.

இறைமை என்ற உயர் அதிகாரம் ஒவ்வொரு சுதந்திர அரசியல் சமுதர்யத்திற்கும் மிக உயர்ந்தனவாகவோ, நிர்ணயம் செய்யப்பட்ட ஒருவனாகவோ அல்லது ஒரு குழுவாகவோ இருக்க வேண்டும் என்றும், எல்லா மக்களுமோ அல்லது ஒரு குழுவாகவோ இருக்க வேண்டும் என்றும், எல்லா மக்களுமோ அல்லது பொது விருப்போ அவனை இறைமையாளன் என ஏற்க வேண்டும் என்றும் அவ்விறைமையாளன் தனக்குத்தானே எல்லைகளை உருவாக்க முடியும் என்றும், அவர்கள் ஏனையவர்களின் கட்டளைகளுக்கு கீழ்படியக் கூடாதென்றும் கூறுவதன் மூலம் இறைமையின் உறைவிடம் ஆதிக்க எல்லை என்பவற்றை விளக்க முற்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

## வினா - 06

**சட்டத்துக்கு ஏன் அடிபணிவு வழங்கப்படுகிறது? ஆராய்க**

### விடைக்குறிப்புக்கள்

அரசறிவியல் பற்றிய ஆய்வில் அரசையும் அரசுடன் தொடர்புடைய நிறுவனங்களையும் பற்றி ஆராய்கையில் சட்டத்தைப் பற்றிய ஆய்வும் முக்கியத்துவம் பெறுகிறது.

சமூகத்தில் காணப்படும் அனைத்துச் சங்கங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றை விடவும் அரசு பெற்றுள்ள உயர்வான அதிகாரமே பிரதானமாக அமைகிறது. இந்த அதிகாரத்தை இறைமை என்று அழைப்போம். அரசினால் பிரகடனப்படுத்தப்படும் ஆணைகள் மூலமாக இவ்வதிகாரம் சமூகத்தைச் சென்றடைகிறது. இந்த ஆணைகளைச் சட்டங்கள் என்றும் அழைக்கலாம்.

பிரசைகள் மூலமாக அல்லது அரச அதிகாரத்தில் இருப்போர் மூலமாக அல்லது அரசாங்கத்தின் மூலமாக சட்டம் பிறப்பிக்கப்படுகின்றது. . பொதுவாக நோக்குமிடத்து சட்டத்தைப் பிறப்பிப்பது அரசின் அடிப்படைச் செயற்பாடுகளில் ஒன்றாகும்.



**மேற்படி கருத்துக்களை தொகுத்து நோக்குமிடத்து.....**

*சட்டம் என்பது இறையின் ஆணை என்றும்,

*இறைமை , அதிகாரம் பெற்ற ஒருவர் அல்லது ஒரு குழுவினால் பிறப்பிக்கப்படும் ஆணையே சட்டம் என்றும் அறிந்து கொள்ள முடியும்.

**சட்டத்திற்கு ஏன் அடிபணிய வேண்டும்?**

இவ் வினாவிற்கான விடையைப் பரந்த அடிப்படையில் சிந்தித்தல் வேண்டும்.

01.. சட்டத்தின் மூலம் மனித விருப்புக்கள் நிறைவேற்றப்படுவதனால் சட்டத்திற்கு அடிபணிய வேண்டும்

02. சட்டம் இறையின் ஆணையாக இருப்பதினால் சட்டத்திற்கு அடிபணிய வேண்டும்.

03. சட்டத்திற்குப் பயப்படுவதினால் சட்டத்திற்கு அடிபணிவு வழங்கப்படுகிறது.

இக் கருத்துக்களை பூரணமாக ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ முடியாது. ஜனநாயகத்தின் அடிப்படையில் சமூகமொன்றின் இறைமைக்கு உரித்துடையவர்கள் பொதுமக்களாவர். ஆகவே சட்டத்தைப் பிறப்பிப்பவர்கள் பொதுமக்களே (அதாவது பொதுமக்கள் பிரதிநிதிகள்) எனவே சட்டம் பிறப்பிக்கப்படுவது மக்களின் தேவைக்காகவே என்பது புலப்படும். எனவே சட்டத்தின் மூலமாக மனித விருப்புக்கள் நிறைவேற்றப்படுவதனால் பொது மக்கள் சட்டத்துக்கு அடிபணிகின்றனர்.

அரச அதிகாரத்தை வகிக்கும் தனிப்பட்ட நபர் அல்லது குழு .இறைமை மிக்கதாகும் . இறையின் ஆணையாய்ச் சட்டம் அமைவதால் மக்கள் சட்டத்திற்கு அடிபணிகின்றனர். இங்கு தனிப்பட்ட ஒருவன் இறைமை பெற்றிருப்பின் பொதுமக்களின் விருப்பு வெறுப்புக்களை சிந்திப்பதை விடப் பலாத்காரமாகவும்சட்டம்பிரயோகிக்கப்படலாம்.

**உ+ம் சர்வாதிகாரம் , பாஸிஸம்**

இத்தகைய ஆட்சிமுறைகளில் சட்டம் திணிக்கப்படுகின்றது சட்டத்தை மீறினால் வழங்கப்படும் தண்டனை பயங்கரமானது. எனவே சட்டத்திற்கு அடிப-ணிகின்றனர். சட்டத்தை மீறினால் தண்டனை வழங்கப்படும் என்ற வாதமும் சட்டத்திற்கு அடிபணிகின்ற ஒரு காரணியாகத் திகழ்கிறது.

இவை மாத்திரமின்றி பின்வரும் காரணிகளும் சட்டத்திற்கான அடிபணிவினை வழங்குகின்றன

1. சமூகப் பழக்கவழக்கங்களும் சமூகக் கோட்பாடுகளும் (அனேக சட்டங்களை உடைப்பதற்கு மக்கள் அஞ்சுவது சமூக மரபுகளின் ஏற்பாடாகும் சேர் ஐவர் ஜெனிங்ஸ்)
2. மரபுகளை ஆதரிக்கும் மனோநிலை.
3. சட்டத்தின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை.
4. சட்டத்தின் மூலம் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுவது.

தொகுத்து நோக்குமிடத்து சட்டத்திற்கு அடிபணிவது தவிர்க்க முடியாத ஒரு நிலையாகும்

## வினா _ 07

**பெரும்பான்மைப் பிரதிநிதித்துவ முறை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை என்பற்றுக்குச் சார்பாகவும், எதிராகவும் முன் வைக்கப்பட்டுள்ள கருத்துக்களை ஆராய்க.**

### விடைக் குறிப்புக்கள்

**பிரதிநிதித்துவ முறை**

1. நவீன அரசுகளில் வாழும் பிரஜைகள் ஜனநாயக உரிமையை தனது சார்பில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதனூடாக பெற்றுக் கொள்கின்றனர்.
2. இன்றைய உலகில் பெரும்பான்மையான நாடுகளில் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்தெடுப்பதற்காக யாப்புக்களில் உறுதிப் படுத்தப்பட்டுள்ள இரண்டு முறைகளைப் பின்பற்றுகின்றனர்.

அ) பெரும்பான்மை முறை ஆ) விகிதாசார முறை

**பெரும்பான்மை முறை**

1. தேர்தல் தொகுதிவாரியாக மக்கள் தம் பிரதிநிதிகளைத் தெரிந்து கொள்வர் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்படுவார்.
2. எமது இலங்கையில் 1977ம் ஆண்டு பொது தேர்தல்வரை இம் முறையே கடைப்பிடிக்கப்பட்டுவந்தது.



**இதன் நன்மைகள் ( சாதகமான கருத்துக்கள்)**

1. தொகுதி ரீதியாக இத் தெரிவு இடம்பெறுவதனால் பிரதிநிதிகளுக்கும் , வாக்காளர்களுக்குமிடையில் நேரடித் தொடர்பு இடம் பெறும்.
2. தேர்தல் தொகுதிகள் அபிவிருத்தியடையலாம். ஆளும்கட்சி உறுப்பினரோ அல்லது எதிர்க்கட்சி உறுப்பினரோ தொகுதிக்குத் தேர்தெடுக்கப்படுவார்.
3. சிக்கல்கள் குறைவு
4. இத் தேர்தல் முறையின் கீழ் வெற்றிடங்களை நிரப்ப இடைத் தேர்தல் நடாத்தப்படுவதால் இடைக்காலத்தில் மக்கள் அபிப்பிராயங்களை அறிந்து கொள்ள முடியும்.

**தீமைகள் (பாதகமான கருத்துக்கள்)**

1. சுயேட்சை வேட்பாளர்கள் அதிகரிப்பதனால் கட்சிகளின் வளர்ச்சி பாதிக்கப்படலாம்.
2. ஜனநாயகத் தன்மை குறைந்தது

உ+ம் A-3000 B-3250 C-3750 இங்கு அதிக வாக்குகளைப் பெற்றுள்ள C உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவார். ஆனால் C க்கு எதிராக இத் தொகுதியில் 6250 வாக்குகள் வழங்கப்பட்டுள்ளன (AB, பெற்ற வாக்குகள்)

**விகிதாசார முறை:**

1. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை என்பது ஒரு குறிப்பிட்ட (பல அங்கத்துவ) தேர்தல் தொகுதியில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் அல்லது பல வேட்பாளர்களை உள்ளடக்கிய ஒரு குழுவுக்கோ கட்சிக்கோ அளிக்கப்பட்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப ஆசனங்களை ஒதுக்கும் உபாயங்களைக் கொண்ட வாக்களிக்கும் முறை ஆகும்.
2. விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் காணப்படும் இரண்டு பிரதான மாதிரிகள்
   1. தனிமாற்று வாக்கு முறை. 2. பட்டியல் முறை.
3. விகிதாசாரத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்தியோரில் டியுனிஸ் அரசியல்வாதியான **ஸி.ஸி.ஜி. அந்திரேயும்** பிரித்தானியாவைச் சேர்ந்த **பாரிஸ்டர் தோமஸ்குரேயும்** முக்கியத்துவம் பெறுகின்றனர். (1850களில் அறிமுகப்படுத்தப்பட்டது) இருப்பினும் இந்த முறை உலகலாவிய ரீதியில் பிரபல்யம் அடைய காரணமாக இருந்தவர் **ஜோன் ஸ்டுவார்ட் மில்** என்பராவர்.

**நன்மைகள் (சாதகமான கருத்துக்கள்)**

1. ஒரு நாட்டில் ஒரு கட்சி தான் பெற்றிருக்கும் ஆதரவுக்கமைய பிரதிநிதித்துவத்தைப் பெறுகின்றது.
2. பாராளுமன்ற பொதுசன அபிப்பிராயத்தின் சாயல்கள் அனைத்தையும் பிரதிபலித்து நிற்கின்றது.
3. ஜனநாயகப் பண்பு மிக்கது.
4. எதிர்க்கட்சிகள் பலமானதாக அமையலாம்.

**தீமைகள் ( பாதகமான கருத்துக்கள்)**

1. பொது

அ) இது கணித முறையில் அமைந்துள்ளதால் சாதாரண வாக்காளருக்கு இலகுவில் விளங்குவது கடினம்.

ஆ) பிரதிநிதிக்கும் தொகுதிக்குமிடையில் நெருங்கிய தொடர்பு குறைவு

இ) இடைத் தேர்தல்கள் இல்லை இதனால் இடைக்காலத்தில் மக்களின் விருப்பு, வெறுப்புகளை அறிதல் கடினம்.

ஈ) கட்சிகள் அளவுக்கு மீறிய அதிகாரத்தைப் பிரயோகிக்கலாம்.

உ) தெரிவு செய்யப்படாத வேட்பாளர்கள் பிழையான வழிகள் மூலம் பிரதி நிதியாக வர முயற்சிக்கலாம்.

ஊ) சில தொகுதிகள் எந்த வொரு பிரதிநிதியையும் பெறமுடியாமற் போகலாம். உதாரணமாக:

கண்டி மாவட்டத்தில் பாத்ததும்பறைத் தேர்தல் தொகுதி 1989 தேர்தலில் எந்தவொரு பிரதி நிதியையும் பெறவில்லை.

எ) கூட்டு அரசாங்கங்கள் தோன்றும் வாய்ப்புண்டு.

2. இலங்கை யாப்பின் படி

அ) இலங்கையில் காணப்படும் வெட்டுப்புள்ளி (1/20) (5%) வாக்குகள் சிறிய கட்சிகளைப் பாதிக்கலாம். உ+ம் 1989 தேர்தலில் இந்த வெட்டுப்புள்ளி முறை காரணமாக ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் கண்டி, கொழும்பு, மாவட்டங்களில் தலா ஒவ்வொரு ஆசனத்தை இழந்தது.

ஆ) இலங்கையில் போனஸ் ஆசன முறையும் சிறிய கட்சிகளின் வளர்ச்சிக்கான பாதிப்பாகும்.

இ) விருப்பத்தெரிவு வாக்குகள் இனரீதியான பிரிவினையை அதிகரிக்கலாம்.

## வினா _ 08

**அ) அரசின் தோற்றம்.** **ஆ) அரசின் தன்மை.**
**பற்றி சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்களான தோமஸ் ஹொப்ஸ், ஜோன் லொக் ஆகியோரின் கருத்துக்களை மதிப்பீடு செய்க.**

## விடைக்குறிப்புக்கள்

சமூகம் மாறும் போது கருத்துக்களும் மாறும் ஒரு காலத்திற்குப் பொருத்தமான கருத்துக்கள் பிறிதொரு காலத்திற்குப்,பொருத்தமில்லாமற் போகலாம். சமய சீர்திருத்தக் காலத்தில் அதனை எதிர்க்க முன்வைக்கப்பட்ட தெய்வீக உரிமைக் கொள்கை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. நம்பிக்கை தளரத் தொடங்கியதும் பகுத்தறிவு தத்துவ ஆராய்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தபோது அக் கோட்பாடு அரசு பற்றி விளக்குவதற்குப் போதுமானதாக அமையவில்லை இதனால் புதிய காலத்திற்குப் பொருந்தக்கூடியதாக உலகியல் அடிப்படையில் ஆட்சியாளர்களின் அதிகாரத்தை விளக்க வேண்டி ஏற்பட்டது.



இப் புதிய விளக்கத்தில் மக்களுக்கும் ஓர் இடத்தை வழங்கவேண்டியிருந்தது. அதனால் தான் மக்களுக்கும் இடங்கொடுத்த ஒரு சிலர் மக்களின் சம்மதத்தின் தன்மை பற்றி ஒரு கொள்கையினை முன்வைத்தனர் இக் கொள்கையே சமூக ஒப்பந்தக் கோட்பாடு எனும் பெயரால் அழைக்கப்படுகிறது.

சமூக ஒப்பந்தக் கொள்கையில் பலர் வேறுபட்ட விளக்கங்களை முன் வைத்துள்ளனர், இவர்களுள்

* **தோமஸ் ஹொப்ஸ்** (Thomas Hobbes 1588 - 1679)
* **ஜோன் லொக்** (John Locke 1632-1704)
* **ஜீன் ஜக்கியூஸ் ரூஸோ** (Jean Jacques Rousseav 1712-1778)

ஆகிய மூவரும் வெளியிட்ட கருத்துக்களே அரசறிவியலில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இம் மூன்று சிந்தனையாளர்களும் இக் கோட்பாட்டினூடாக அரசின் தோற்றம், தன்மை பற்றி விளக்க முற்பட்டபோதிலும் அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுவதாகவும், வேறுபட்ட கோணத்தில் நின்று முன்வைக்கப்பட்ட கொள்கைகளாகவும் காணப்படுகின்றன. இக் கோட்பாட்டின் மிகத் தெளிவான முடிவு: **அரசு என்பது ஓர் ஒப்பந்தத்தின் மூலமாக மனிதனால் உருவாக்கப்பட்டது என்பதாகும்.**

தோமஸ் ஹொப்ஸ் ( 1588-1679) நூல் :- லேவியாதன் ( Leviathan)

### அரசின் தோற்றம்

அரசின் தோற்றம் பற்றி விளக்க ஹொப்ஸ் வரலாற்றை இரண்டு பகுதிகளாக வகுக்கின்றார்.

அ) அரசு தோன்ற முன்னைய நிலை.

( இது இயற்கை நிலையாகும். இக் காலத்தில் இடம் பெற்ற சமூகம், மாற்றமுறும் சமூகமாகும்.)

ஆ) அரசு தோன்றியதற்குப் பிற்பட்ட நிலை (இது சிவில் சமூகமாகும்.)

**ஹொப்ஸின் பார்வையில் இயற்கை நிலை**
**(அரசு தோன்ற முன்னைய நிலை)**

அரசு தோன்றுவதற்கு முன்னர் மனிதன் இயற்கை நிலையில் வாழ்ந்தான் இயற்கை நிலையில் வாழ்ந்த மனிதன் காட்டு மிராண்டியாகக்காணப்பட்டான். அவனது வாழ்க்கை குறுகியது மரண பயம் மிக்கது. தனிமையானதாகவும் அபாயகரமானதாகவும் காணப்பட்டது இதனால் அச் சமூகத்தில் நீதியோ பாதுகாப்போ நிலவ வில்லை.

எவ்வித ஆட்சியோ, சட்டங்களோ இன்மையே இந்த அராஜக நிலைக்குக் காரணம் எனக் கூறிய ஹொப்ஸ் இயற்கை நிலையில் காணப்பட்ட பயங்கரத் தன்மைக்கு மனிதன் பூரண சுதந்திரத்தை அனுபவித்த தன்மையும் ஒரு காரணம் என்கின்றார்.

சமூகப் பாதுகாப்போ, நிலைபேறான தன்மையோ காணப்படாத இந் நிலையில் ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஓயாத பூசல்களுக்கும் போராட்டங்களுக்கும் ஆட்பட்டிருந்தான். இந் நிலையை ஒரு கட்டத்தில் மனிதனால் பொறுக்க முடியாததாகி விட்டது. இந் நிலையிலிருந்து எவ்வாறுமீளலாம் என்பதை மனிதன் எதிர்பார்த்தான் பின்னர் இயற்கை நிலையை முடிவிற்கு கொண்டுவரும் நோக்கில் அவன் தன்னைப் போன்று அவதிப்பட்ட ஏனைய மனிதர்களுடன் ஒன்றிணைந்து ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டான். இவ் ஒப்பந்தப்படி இயற்கை நிலையில் வாழ்ந்த ஒவ்வொருவரும் தமது பாதுகாப்பிற்காக இயற்கை தமக்கருளிய அதிகாரத்தை யும் ,உரிமையையும் தான் உருவாக்கிய சிவில் சமூக ஆட்சியாளனிடம் ஒப்படைத்தனர்.

**அரசின் தன்மை**

**ஹொப்ஸின் பார்வையில் சிவில் சமூக நிலை**

(அரசு தோன்றியதற்குப் பிற்பட்ட நிலை)

இவ் ஒப்பந்தமானது பூரணமானதாயும் மாற்றமுடியாததாயும் இருந்தது. ஆட்சியாளன் உடன் படிக்கைக்கு உட்படாது குடிகள் மட்டும் தன்னிச்சையாக இந்த உடன்படிக்கையை அமைத்திருந்தமையால் ஆட்சியாளன் எவ்விதத்திலும் கட்டுப்பட்டவனாக இருக்கவில்லை. ஆட்சியாளனே உச்சமானவன், அவன் இட்ட கட்டளையே சட்டம் குடிகளின் வாழ்வும் சாவும் அவனின் அதிகாரத்திற்குட்பட்டதே. ஆட்சியாளனிடம் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதென்றும் சாகாவரம் பெற்ற ஆத்மீக இறைமியல் கீழ் வாழும் குடிகள் லௌகித இறைவனாகிய அரசின் மூலமே அமைதியையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள முடியுமென **ஹொப்ஸ்** கூறுகிறார்.

ஆட்சியாளன் நிபந்தனைக்கு உட்படாததினால் அவன் குடிகளுக்குப் பொறுப்புச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கவில்லை மேலும் ஒப்பந்தத்தின் மூலம் தமது அதிகாரத்தை ஒப்படைத்த பின்னர் அவ்வதிகாரத்தைப் பிறிதொருவரிடம் ஒப்படைக்கும் அதிகாரத்தினை குடிகள் பெற்றிருக்க வில்லை. எனவே ஆட்சியாளனின் கட்டளைக்குக் குடிகள் கீழ்ப்பட்டிருப்பது கடமையாகும். அதுமட்டுமன்றி ஆட்சியாளனை எதிர்க்கவோ விமர்சிக்கவோ குடிகள் உரிமையற்றவர்கள்.

அரசின் அதிகார எல்லை சமூகத்தில் சர்வ வியாபகமானது எனவே .ஆட்சியாளனின் அனுமதியுடனே ஏனைய தாபனங்கள் அமைக்கப் பட்டு கொண்டு நடத்தப்படல் வேண்டும்.

தொகுத்து நோக்குமிடத்து இராஜாங்கம் என்பது ஒரே அரசனாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதன் மூலம் ஹொப்ஸ், மன்னனுக்கு வரையரையற்ற அதிகாரத்தைக் கொடுத்து வரம் பெற்ற முடியாட்சியை அல்லது தனி மனித சர்வாதிகாரத்தை நிலை நாட்ட முற்படுகின்றார். என்றால் மிகையாகாது.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

**ஜோன் லொக் 1632 - 1704**

**நூல்-சிவில் அரசாங்கத்தின் இரண்டு கடமைகள் 1690**

(Two Treatises on Civil Government)

**ஹொப்ஸைப் போலவே, லொக்கும் அரசின் தோற்றம், தன்மை என்பவற்றை விளக்க சமூக ஒப்பந்தக் கோட்பாட்டையே பயன்படுத்தியுள்ளார்.. இருப்பினும் இயற்கை நிலை அரசின் தன்மை போன்றன பற்றிய கருத்துக்கள் ஹொப்ஸின் கருத்துக்களை விட வித்தியாசமானவையாகும்.**

**அரசின் தோற்றம்**

அரசின் தோற்றம் பற்றி விளக்க இவரும் வரலாற்றை இரு பிரிவுகளாகப் பிரிக்கின்றார்.

1. இயற்கை நிலை ( அரசு தோன்ற முன்னுள்ள நிலை)
2. சிவில் சமூகம் (அரசு தோன்றியதன் பின்னுள்ள நிலை) இருப்பினும் ஹொப்ஸின் அணுகுமுறையைவிட இவரின் அணுகுமுறையானது முற்றிலும் மாறுபட்டதாகும்.

**லொக்கின் பார்வையில் இயற்கை நிலை**

இயற்கையில் வாழ்ந்த மனிதன் மிகவும் நல்லவன் . அவன் இயற்கை அருளிய வளங்களையும் சுதந்திரங்களையும் உரிமைகளையும் வரையறையின்றி அனுபவித்து வந்தான் . அங் கு வரையறையற்ற சமத்துவம் காணப்பட்டது அவன் அனுபவித்த உரிமைகளுள் மிக முக்கியமானவை உயிர்வாழ்வதற்கும் சுதந்திரமாக இருப்பதற்கும் சொத்து வைத்திருப்பதுக்குமான உரிமைகளாகும்.

மேலும் இயற்கை நிலையில் வாழ்ந்த மனிதன் தர்க்கரீதியான அறிவை உடையவன். அக் காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பழக்க வழக்கங்களின் அடிப்படையிலே மனிதன் வாழ்ந்தான். பழக்கவழங்கங்கள் எனும் போது மற்றவனுக்குப் பங்கம் விளைவிக்காத வகையில் வாழ்வதும் ஏனையவர்களின் சொத்துக்களுக்கும் பங்கம் விளைவிக்காமையுமே ஆகும்.

அச் சமூகத்தில் சட்டங்களும் வாழ்க்கைத் திட்டங்களும் காணப்பட்டன . இயற்கை நிலையில் மனிதன் அமைதியான வாழ்க்கையை நடத்தினான் . இவ்வாறு லொக் கூறுகின்ற இயற்கை நிலையானது அமைதியானதாகவும் சிறப்பானதாகவும் அமைந்திருப்பின் இந் நிலையிலிருந்து விடுபட்டு மனிதன் ஏன் அரசுக்கு அதிகாரத்தை அளித்தான் என்ற வினாவும் எழுகின்றது.

இயற்கை நிலையின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட சில குறைபாடுகளும் சச்சரவுகளும் இதற்குக் காரணமென்று விளக்கத்தைத் தருகின்றார். மனிதன் ஆரம்பத்தில் அமைதியான வாழ்க்கையை நடத்தி வந்தாலும் பின்னர் சொத்துடைமை பற்றிய சச்சரவுகள் தலைதூக்கத் தொடங்கியதும் அமைதி குலைந்தது வாழ்க்கைக்கும் சுதந்திரத்திற்கும் சொத்துரிமைக்கும் இடையூறுகள் ஏற்படத் தொடங்கின.

இத்தகைய நிலையைச் சமூகமாக்கி சமூக தாபனங்கள் அழிவுறாது பாதுகாக்கச் சட்டதிட்டமோ அதிகாரத் தாபனமோ காணப்படவில்லை இதனால்தான் இயற்கை நிலையில் வாழ்ந்த மனிதன் ஒப்பந்தமொன்றினைச் செய்து கொண்டு சிவில் சமூகத்தை ஏற்படுத்திக் கொண்டான்.

**<u>அரசின் தன்மை</u>**

இவ்வாறு அரசியல் சமுதாயம் ஒன்றை அமைத்தவர்கள் தமது உயிர் உடைமைகளைப் பாதுகாக்க ஒரு தலைவனைத் தெரிவு செய்து கொண்டு அவனோடு மற்றுமொரு ஒப்பந்தத்தைச் செய்தனர். எனவே இங்கு இரண்டு உடன்படிக்கைகளை லொக் குறிப்பிடுகிறார்.

1. சமூக ஒப்பந்தம் 2. அரசாங்க ஒப்பந்தம்

இங்கு முதலாவது ஒப்பந்தம் அரசையும் இரண்டாவது ஒப்பந்தம் அரசாங்கத்தையும் ஏற்படுத்தியது இங்கு இறைமை மக்களிடமும் மன்னனிடமும் காணப்படும் என்றும், சட்ட வாக்க அதிகாரம் மக்களிடம் இருக்குமென்றும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசினுடைய கடமை என்றும் இவர் குறிப்பிடுகிறார்.

**<u>ஆட்சியாளர்களின் கடமை</u>**

1. ஆட்சியாளன் தான் பெற்ற அதிகாரத்தைச் சமூக நலனுக்காகவே பயன் படுத்த வேண்டும்.

2. பொதுமக்களின் சொத்துடைமையை அவனின் விருப்பத்திற்கு மாறாக பறிமுதல் செய்ய முடியாது.

3. ஆட்சியாளன் தான் பெற்ற அதிகாரத்தை மக்களின் அனுமதியில்லாமல் பிறிதொருவரிடம் கையளிக்க முடியாது.

4. மக்கள் தம் விருப்பின் பேரில் அரசுக்கு அதிகாரத்தை வழங்கி உள்ளதால் தமது இயற்கையான உரிமைகளை அனுபவிக்கவும் சுதந்திரமான வாழ்க்கையை நடாத்தவும் அவசியமான நிலைமையை உருவாக்கி நிலை நிறுத்துவது ஆட்சியாளனின் கடமையாகும்.

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றத் தவறினால் அல்லது சிறப்பான ஆட்சியை நடத்தாவிட்டால் தாம் வழங்கிய அதிகாரத்தைத் திருப்பிப் பெற்று பிறிதொருவரிடம் கையளிக்கும் உரிமையை மக்கள் பெற்றிருந்தனர். அரச தாபனங்கள் அனைத்திலும் அதிகாரம் மக்கள் விருப்பிலேயே தங்கியுள்ளது. அதன் மூலம் அரச அதிகாரம் என்பது ஒருவரிடம் அல்லது பல தாபனங்களிடம் பிரிக்கப்பட்டிருக்கின்றதெனக் கூற முற்படுகின்றார்.



லொக்கின் கருத்துக்களைத் தொகுத்து நோக்குமிடத்து பின்வரும் முடிவுக்கு வரலாம்

1. அரசு என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனம்
2. எனவே ஆட்சியாளர்களை மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும்.

லொக்கின் கருத்துக்கள் மன்னனுக்கும், பாராளுமன்றத்திற்கும் இடையே உண்டான போராட்டத்தின் ஒரு கருவியாக அமைந்ததுடன் தாராண்மை ஜனநாயக் கோட்பாடுகளுக்கும் உறுதுணையாக அமைந்தன. எனினும் இவர் கூறும் ஜனநாயகக் கருத்துக்கள் அக்கால சூழ் நிலையில் ஒரு சிலருடன் மட்டுமே சூழ்ந்ததாக காணப்பட்டது. எனவே தான் லொக் ஜனநாயவாதி அல்லாமல் பிரபுக்களினது உரிமைகளைப் பாதுகாக்க முனையும் **சொத்துடையோரின் வல்லாட்சி** அரசை அமைக்க எத்தனித்த ஒரு அரசியல் சிந்தனையாளராக கருதப்படுகிறார். அவரால் வெயிடப்பட்ட சுதந்திரம் பற்றிய கருத்துக்கள் செல்வந்தர்களின் சுதந்திரம் பற்றியதாகவே அமைந்திருந்தது. சுருக்கமாக **வரம்புறு முடியாட்சிக்குரிய** அல்லது **சிலராட்சிக்குரிய_** கோட்பாடாக இதைக் கருதலாம்.

## வினா - 9

**அ) ஜனாதிபதி ஆட்சி முறையையும் மந்திரிசபை (கெபினட்) ஆட்சி முறையையும் வேறுபடுத்திச் சுருக்கமாக ஆராய்க.**
**ஆ) இவ்வாட்சி முறைகள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள சாதக, பாதக கருத்துக்களைக் கூறுக.**

## விடைக் குறிப்புகள்

அ) இன்றைய ஜனநாயக உலகில் காணப்படும் ஆட்சி முறைகளைப் பிரதானமாக ஜனாதிபதி ஆட்சி முறை, மந்திரிசபை ஆட்சி முறை (கெபினட்) என்று வகைப்படுத்துகின்றனர். ஒரு நாட்டின் நிர்வாகத்துறை சட்டத்துறையினின்றும் தெரிவு செய்யப்படாது சட்டத்துறையுடன் நெருங்கிய தொடர்பற்றுக் காணப்படுமாயின் அத்தகைய ஆட்சி முறையினை ஜனாதிபதி ஆட்சிமுறை என்கின்றோம். ஜனாதிபதி ஆட்சி முறைக்கு உதாரணமாக 78ம் ஆண்டின் பின்னர் இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.

ஒரு நாட்டின் நிர்வாகத்துறை சட்டத்துறையோடு நெருங்கிய தொடர்பு கொண்டு சட்டத்துறையினின்றே தெரிவு செய்யப்படுமாயின் அத்தகைய ஆட்சி முறையினை கெபினட் ஆட்சிமுறை என்று அழைக்கின்றோம். உதாரணமாக பிரித்தானியா இந்தியா 78ம் ஆண்டின் முன்னர் இலங்கை போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.

பொதுவாக இன்றைய உலகில் ஒவ்வொரு நாட்டினதும் நிர்வாகத் தன்மையை அடிப்படையாகக் கொண்டே அரசாங்க முறை பெயரிட்டு அழைக்கப்படுவது வழக்கமாகிவிட்டது.

ஜனாதிபதி ஆட்சி முறைக்கும், மந்திரிசபை ஆட்சி முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராயலாம்.

### 1. தெரிவுமுறை

மந்திரிசபை ஆட்சி முறையில் தெரிவானதும் சட்டத்துறைக்குள்ளே இருந்து இடம் பெறும். பொதுவாக மந்திரிசபையின் தலைவரான பிரதம மந்திரி சட்டத்துறையின் உறுப்பினர்களிடமிருந்தே தெரிவு செய்யப்படுவர். (அனேகமாக ஆளும் கட்சியின் தலைவர்) நிர்வாகத் துறைக்குப் பொறுப்பான இந்த மந்திரி சபை, சட்டத்துறையினுள்ளிருந்தே பிரதமரால் அமைக்கப்படும். எனவே மந்திரிசபை ஆட்சியில் மந்திரி சபை சட்டத்துறைக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியதாக இருக்கும். ஆனால் ஜனாதிபதி ஆட்சி முறையை எடுத்து நோக்குமிடத்து நிர்வாகத்திற்குப் பொறுப்பான ஜனாதிபதி, சட்டத்துறையிலில்லாமல் தனிப்பட்ட அலகாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். உதாரணமாக இலங்கையின் ஜனாதிபதியை இலங்கை மக்கள் நேரடியாகதேர்ந்தெடுப்பர். எனவேசட்டத்துறைக்கு இவர் எவ்விதத்திலும் பொறுப்புச் சொல்லவேண்டியதில்லை.

### 2. அதிகாரப்பிரிவினை

ஜனாதிபதி ஆட்சிமுறைக்கும், மந்திரிசபை ஆட்சி முறைக்கும் இடையே உள்ள வேறுபாட்டிற்கு மூல காரணம் ஜனாதிபதி ஆட்சி முறை அதிகாரங்கள் பிரிக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டிருப்பதே யாகும். ஜனாதிபதி ஆட்சி முறையில் நிர்வாகத்துறை சட்டத்துறையில் இருந்து பிரிக்கப்படுவதால் நிர்வாகத் துறை தனி அலகாகப் பரிணமிக்கின்றது.

ஆனால் மந்திரி சபை ஆட்சி முறையில் நிர்வாகத்துறை சட்டத் துறைக்குள்ளே அமைந்திருப்பதனால் ஜனாதிபதி ஆட்சி முறை போன்ற ஒரு தனி அலகாகப் பரிணமிப்பதில்லை. அதாவது மந்திரிசபை ஆட்சி முறையில் நிர்வாகத்துறையின் வாழ்வும், சாவும் சட்டத்துறையாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. ஏனெனில் சட்டத்துறை கலைந்தால் நிர்வாகத்துறையும் கலைந்து விடும். அதனால் ஜனாதிபதி ஆட்சி முறையில் சட்டத்துறை கலைந்தாலும் நிர்வாகத்துறை கலைய வேண்டும் என்ற எவ்வித கட்டாயப்பாடும் கிடையாது.

### 3. சட்டங்களின் தன்மை

மந்திரிசபை ஆட்சி முறையில் சட்டத்துறையும், நிர்வாகத்துறையும் இணைந்திருப்பதனால் சட்டங்கள் ஓரிடத்திலிருந்தே (சட்ட சபையிலிருந்தே) பிறப்பிக்கக்கூடிய நிகழ் தகவு உண்டு. ஆனால் ஜனாதிபதி ஆட்சி முறையில் சட்டங்கள் பல திசைகளிருந்தும் பிறப்பிக்கப்படலாம் இத்தகைய சட்டங்கள் தொடர்பற்றதாகவும், இயல்பற்றதாகவும் காணப்படவும் முடியும்.



### 4. நிர்வாகத் துறையின் ஆயுள் காலம்

இவ்விருவகையான ஆட்சி முறையிலுமுள்ள வேறுபாடு நிர்வாகத் துறையின் ஆயுள் காலம் சம்பந்தமாகவும் காணப்படுகின்றது . ஜனாதிபதி தெரிந்தெடுக்கப்பட்ட கால எல்லை வரை பதவி வகிக்கின்றார். (உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் 4ஆண்டுகள் இலங்கையில் 6ஆண்டுகள்) ஆனால் மந்திரி சபையோ சட்ட சபையின் நம்பிக்கை இழந்ததும் பதவியிலிருந்து நீக்கப்படலாம். (மிக அண்மைக்கால உதாரணம், பாகிஸ்தான் பாராளுமன்றம் பாகிஸ்தானிய நிர்வாகத்துறையின் மீது நம்பிக்கை இழந்ததும் 1993.04.18ல் கலைக்கப்பட்டதைக் குறிப்பிடலாம்) எனவே நிர்வாகத்துறை சட்டத்துறை என்பவற்றின் பதவிக்காலம் யாப்பளவில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட அது நம்பிக்கையைப் பொறுத்தே உள்ளதென்பது புலனாகிறது.

அதே நேரம் ஜனாதிபதி ஆட்சி நிலவும் சில நாடுகளில் இரண்டு தடவைக்கு மேல் ஒருவருக்குப் பதவி வகிக்க முடியாதிருக்கும் (இதன்படி கூடியபட்சம்) ஐ. அமெரிக்க ஜனாதிபதி 8ஆண்டுகளுக்கும், ஸ்ரீ லங்கா ஜனாதிபதி 12 ஆண்டுகளுக்கும் பதவி வகிக்கலாம்) ஆனால் மந்திரிசபை ஆட்சி முறையில் இத்தகைய கட்டுப்பாட்டைக் காண முடியாது.

நிர்வாக ஆயுள் காலத்தைப் பொறுத்து இவ்விரு ஆட்சி முறைகளுக்குமிடையில் பிறிதொரு வேறுபாடும் தோன்றுகிறது. மந்திரிசபை முறையில்மந்திரிசபை உறுப்பினரும்பாராளுமன்ற உறுப்பினரும் பதவிக்கு வருமுன் நாட்டு மக்களுக்கு நன்கு பரிச்சயமானவராக இருப்பார் இவர் ஆளும்கட்சியாகவராவிட்டாலும்கூட எதிர்க்கட்சி உறுப்பினராகவோ, நிழல்மந்திரி சபை உறுப்பினராகவோ மக்களுக்குக் காட்சியளிப்பார்.

ஆனால் ஜனாதிபதி ஆட்சி முறையில் அவ்வாறு காட்சியளிப்பதில்லை. ஜனாதிபதி தோல்வியடையுமிடத்து அல்லது அவரது பதவிக்காலம் முடியுமிடத்து அவர் முக்கியத்துவம் குறைந்து கொண்டே சென்றுமக்களால் மறக்கப்பட்டவராகி விடுவார். (உதாரணமாக இலங்கையில் திரு ஜே.ஆர். ஜயவர்தனா அவர்கள்)

மேலும் ஜனாதிபதி அரசியல் திட்டத்தினால் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் காரணமாகவும் தனது பதவியின் உறுதி காரணமாகவும், தனது அமைச்சரவையின் எசமானாகக் காணப்படுவார். ஆனால் மந்திரிசபை ஆட்சி முறையில் கூட்டுப் பொறுப்பு முக்கியத்துவம் பெறுவதால் பிரதமருக்கும் அமைச்சரவைக்குமிடையில் பாரிய வேறுபாடு காணப்படுவதில்லை, காரணம் பிரதம மந்திரியும் அவரது சகாக்களும் மக்களிடமிருந்து ஒரேவிதமான அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதனால் அவர்கள் சம அந்தஸ்து உடையவர்களாகக் கருதப்படுவர்.

இவ்வாறாக ஜனாதிபதி ஆட்சி முறைக்கும் மந்திரிசபை ஆட்சி முறைக்கும் இடையில் வேறுபாடுகளைக் காட்ட முடியும்

ஆ) ஜனாதிபதி ஆட்சி முறை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள சாதகமான கருத்துக்கள். (நன்மை)

1. கால சூழ்நிலைக்கேற்ப சட்டங்களை இயற்றிச் செயற்படுத்துவதற்கு உதவியாயிருப்பதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தலாம்
2. தேர்தல் செலவுகள் குறைவு (இங்கு ஜனாதிபதியைத் தெரிவு செய்ய அடிக்கடி தேர்தல் நடைபெறமாட்டாது).
3. ஒருவரில் ஒருவர் தங்கி இருக்கவோ அன்றேல் எதிர்பார்த்திருக்கவோ தேவையில்லை (நிர்வாகம் சுயமாகச் செயற்படும்)
4. பொதுவாக சகலருக்கும் ஒரேவிதமான ஆட்சி.
5. பலமான நிர்வாகம்.

ஜனாதிபதி ஆட்சிமுறை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பாதகமான கருத்துக்கள் (தீமைகள்)

1. பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் தன்மை.
2. ஆக்கபூர்வமான கண்டனங்களுக்கு .இடமில்லை.
3. எதிர்க்கட்சியினர் வலுவற்றதாக்கப்படுவர்.
4. மக்களுக்கும் ஜனாதிபதிக்குமிடையே தொடர்புகள் குறைந்திருக்கும்.
5. சர்வாதிகாரத் தன்மையுடன் செயற்பட வாய்ப்புண்டு உ+ம் அமெரிக்க ஜனாதிபதி வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தல்)
6. குற்றப் பிரேரணை மூலம் ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்ய முடியும் எனக் கூறப்பட்டுள்ள போதிலும் அமெரிக்க இலங்கை அனுபவங்களை எடுத்து நோக்கும் போது இது சாத்தியமற்ற விடயம் போலத் தோன்றுகின்றது எனவே பதவிக்காலம் முடியும் வரை அவரைப் பதவி நீக்கம் செய்ய முடியாத நிலை ஏற்படலாம்.

மந்திரிசபைக்கு ஆட்சிமுறை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள சாதகமான கருத்துக்கள்(நன்மைகள்)

1. எதிர்க்கட்சியின் ஆக்க பூர்வமான கண்டனங்களுக்கு இடம் அளித்தல்
2. திட்டங்கள் யாவும் நல்ல முறையில் விவாதிக்கப்படலாம்.
3. பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பு இருக்கும்.
4. பதவியிலிருந்து வீழ்த்தப்பட்டாலும் தொடர்ந்தும் தனது நிலைமையைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். (உதாரணமாக எதிர்கட்சியில் அங்கம் வகித்தல்)
5. சட்டத்துறையின் அங்கீகாரம் இருக்கும் வரையில் பதவியில் இருக்க முடியுமாக இருத்தல்.



மந்திரிசபை ஆட்சிமுறை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பாதகமான கருத்துக்கள் (தீமைகள்)

1. காலதாமதம் ஏற்படலாம்.
2. அடிக்கடி பாராளுமன்றத் தேர்தல்கள் நடாத்தப்படுவதால் செலவுகள் அதிகரிக்கப்படலாம் (உ+ம் 1960 மார்ச்சிலும் ஜூலையிலும் இலங்கையில் இரண்டு தேர்தல்கள் நடாத்தப் பட்டமை)
3. ஒவ்வொரு மந்திரியும் தங்கியிருக்க வேண்டிய நிலை(கூட்டுப் பொறுப்பு)
4. பிரதமர் சர்வாதிகாரப் போக்குடையவராக மாறலாம் 1972ல் இலங்கையில் தொடர்ச்சியாக 565 நாட்களுக்கு மேல் அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டமை, 1975 இந்திராகாந்திக்கெதிரான உயர் நீதிமன்றத் தீர்ப்பினைக் கூட தள்ளுபடி செய்து அவசரகால நிலைமையைக் கொண்டு நடத்தியமை)
5. சிறுபான்மையோர் புறக்கணிக்கப்படலாம்.

## வினா - 10

| |
|---|
| **நவீன உலகில் பல சமஷ்டி அரசுகள் பிளவடைந்துள்ளன சமஷ்டிகள் நிலைத்திருப்பதற்கான காரணங்களைப் பற்றி ஆராய்க.** |

| |
|---|
| **சமஷ்டி அரசொன்றை வெற்றிகரமாகத் தாபித்துச் செயற்படுத்தத் தேவையான காரணிகள் யாவை?** |

### விடைக்குறிப்புகள்

சமஷ்டி ஆட்சி முறை என்றால் என்ன என்பதை அறிய சமஷ்டி ஆட்சி முறை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள சில வரைவிலக்கணங்களை கவனிப்பது பொருத்தமானதாக இருக்கும்.

*தேசிய ஒற்றுமையும் அதிகாரத்தையும் மானில உரிமைகளின் பாதுகாப்பினையும் பொருந்தச் செய்யும் அரசியல் வழி முறையே சமஷ்டியாகும்.
**- பேராசிரியர் டைசி -**

* பல நாடுகள் ஒன்று சேர்ந்து ஒரு புதிய நாட்டினை அமைக்கும் முறையே சமஷ்டியாகும். **- ஹமில்டன் -**

* நாடுகள் குறுநிலப் பகுதி மானிலங்கள் குடியரசுகள் எனப்பல விதமாக வரையறுக்கப்படும் சமஷ்டியின் உறுப்புக்களுக்கும் மைய அரசியலுக்கும் இடையில் அதிகாரப் பங்கீடு ஏற்படுமாயின் அத்தகைய ஆட்சி முறை சமஷ்டி ஆட்சிமுறை எனப்படும். **- ஜே. டபிள்யூ. கானர் -**

இவற்றிலிருந்து சமஷ்டி ஆட்சிமுறை என்றால் என்ன என்பதை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். இன்று சமஷ்டியாட்சி நிலவும் நாடுகளுக்குச் சில உதாரண நாடுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்
ஐக்கிய அமெரிக்கா, சுவிற்சர்லாந்து ,கனடா, இந்தியா, ஜெர்மனி மலேசியா, வெனிசூலா, மத்திய கிழக்கு ஆபிரிக்கா........

சமஷ்டி முறையொன்றின் உருவாக்கமானது தனித்து ஒரு காரணியினாலோ அல்லது பல காரணிகள் ஒன்றிணைவதன் மூலமோ சாத்தியமாக முடியும். இவ்வாறு தோற்றம் பெற்ற ஒரு சமஷ்டி முறையானது வெற்றியடைய வேண்டுமாயின் அடிப்படையான நிலைமைகள் சில இங்கு காணப்பட வேண்டும். அந்த வகையில் சமஷ்டி முறையொன்றின் தோற்றத்திற்கும், தோற்றம் பெற்ற சமஷ்டி முறையின் சிறப்பான செயலாக்கத்திற்கும், பின்வரும் நிலைமைகள் மிகவும் அடிப்படையானவையும், பொதுவானவையுமாகும்.

## ஒன்றிணைவதற்கான அல்லது ஒன்றிணைந்திருப்பதற்கான விருப்பு

சமஷ்டிகள் நிலைத்திருக்க வேண்டுமாயின் ஒன்றிணையக் கூடிய அல்லது ஒன்றிணைந்து செயற்படக்கூடிய விருப்பு மிக முக்கியமானதாகும். இவ்வாறாக ஒன்றிணைவதற்கு அல்லது ஒன்றிணைந்து இருப்பதற்கு விருப்பு இல்லாதவிடத்து காலகதியில் சமஷ்டிகள் உடைவுறக்கூடிய நிலை உருவாகலாம்.

உதாரணமாக, சோவியத் யூனியனின் கீழ் லித்துவேனியா, .லத்வியா எசுத்தோனியா ஆகிய போல்கன் குடியரசுகள் விருப்ப நிலையில் இணைந்திருக்கவில்லை. இந் நிலையில் 1980ன் தசாப்தங்களின் இறுதிப் பகுதியில் ஜனாதிபதி கொர்பசோவினால் முன்வைக்கப்பட்ட பெரஸ்ரோரிகா, கிளாஸ்ட்நோஸ்த் ஆகிய திட்டங்களின் விளைவாக சோவியத் யூனியனில் ஏற்பட்ட தளர்வு நிலையைப் பயன் படுத்திக் கொண்டு ஆரம்பத்திலே பிரிவடைந்த குடியரசாக லித்துவேனியா காணப்படுகின்றது. எனவே இணையக்கூடிய அல்லது இணைந் திருக்கக்கூடிய விருப்பம் முக்கியமானதென்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

## ஒன்றிணைப்பேயன்றி முழுமையாகக் கலந்து விடல் கூடாது

சமஷ்டிகள் நிலைப்பதற்கு ஒன்றிணைந்திருந்தாலும் இரண்டறக் கலந்து விடாத மனோநிலை மிகவும் முக்கியமானதாகும். அதாவது மத்திய அரசில் இணைந்திருந்தாலும் தத்தமது மானில அரசுகள் பற்றிய பற்றினையும் வைத்திருக்க வேண்டும்.



## கருத்தொருமைப்பாடு

சமஷ்டிகள் நிலைத்திருக்க வேண்டுமாயின் கருத்தொருமைப்பாடும் முக்கியமானதோர் அம்சமாகும். சமஷ்டிகளின் இன, மத, மொழி, கலாசாரம் மற்றும் கொள்கைகளில் வித்தியாசப்பட்ட பல மானில அரசுகள் காணப்படும் இதனால் கருத்து முரண்பாடுகள் ஏற்படக்கூடிய பலவாய்ப்புக்கள் உண்டு இருப்பினும் மத்திய அரசு என்று வருமிடத்து அவை கருத்தொருமைப்பாட்டுடன் செயற்படல் வேண்டும் உதாரணமாக அண்மையில் யூகோஸ்லாவியா சமஷ்டி உடைவுற கருத்தொருமைப்பாடற்ற நிலையும் ஒரு காரணியாக சுட்டிக்காட்டப்படுகிறது.

## சிறந்த தலைமைத்துவம்

சமஸ்டிகளின் நிலைப்பிற்கு சிறந்த தலைமைத்துவமும் ஓர் அத்தியவசியமான விடயமாகும் தலைமைத்துவத்தில் ஏற்படக்கூடிய பலவீனங்கள் சில நேரங்களில் சமஷ்டி அரசுகளை பலவீனமடையச் செய்து காலகதியில் பிரிவடையச் செய்துவிடலாம்.

இதற்குச் சிறந்த உதாரணமாக யூகோஸ்லாவியாவைக் குறிப்பிடலாம் சமஷ்டி நாடான யூகோஸ்லாவியாவில் ஜனாதிபதி மார்ஷல் டிட்டோவின் தலைமைத்துவம் ஒரு பொற்காலமாக வர்ணிக்கப்பட்டது. 1981 டிட்டோ மரணமடைந்ததையடுத்து அங்கு ஒரு சிறந்த தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமற் போய்விட்டது. யூகோஸ்லாவியாவின் பிரிவிற்கு இது ஓர் அடிப்படைக் காரணமாகக் குறிப்பிடப்படுகிறது.

## புவியியல் ரீதியான இணைப்பு

சமஷ்டி அரசுகள் இணைந்திருக்க வேண்டுமாயின் புவியியல் ரீதியான இணைப்பும் மிகமுக்கியமானதாகும். பொதுவாக சமஷ்டி அரசுகளுக்கிடையில் புவியியல் ரீதியாக ஏற்படக்கூடிய பிரிவானது காலகெதியில் சமஷ்டிகளை உடைவுறச் செய்யலாம் உதாரணமாக 1971ம் ஆண்டில் கிழக்குப் பாக்கிஸ்தான் பிரிவடைந்து பங்களாதேசாக மாறியமைனயக் குறிப்பிடலாம்.

## மானில அரசுகள் சமமாக மதிக்கப்படல்

சமஷ்டிகள் நிலைத்திருப்பதற்கு இதையும் ஒரு காரணியாக சுட்டிக் காட்டலாம் சமஷ்டியில் இணைந்திருக்க க் கூடிய அனைத்து மானில அரசுகளையும் மத்திய அரசு சமமாக மதித்து நடந்து கொள்ள வேண்டும் ஒரு மானில அரசுக்கு அதிக சலுகைகளும் மற்றுமொரு அரசிற்கு குறைந்த சலுகைகளும் வழங்கப்படுமாயின் குறைவான சலுகைகளைப் பெறும் மானில அரசு பிரிவடைய எத்தனிக்கலாம். எனவே மானில அரசுகளிடையே சமத்துவத்தன்மை பேணப்பட வேண்டியது முக்கியமாகும்.
மேலும் சமஷ்டிகள் நிலைத்திருக்க தேசிய மட்டத்திலான கட்சிகள் அரசியல் அறிவு போன்றவையும் அவசியமெனக் கொள்ளப்படுகின்றது.

## வினா - 11

பின்வரும் எண்ணக்கருத்துக்களை விளக்குக.

அ) பொதுசன அபிப்பிராயம்

ஆ) பாஸிஸம்

### விடைக்குறிப்புகள்

#### அ) பொதுசன அபிப்பிராயம்

ஜனநாயகத்தின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் பொதுசன அபிப்பிராயம் மிகவும் முக்கியமான ஒரு கருவியாகும். ஆரம்ப காலங்களில் ஆட்சியாளர்கள் தெய்வீக உரிமை உள்ளவர்கள் என மக்கள் நம்பியதனால் ஆட்சியாளர்களின் நடத்தை பற்றிய கேள்விகளோ கண்டனங்களோ தெரிவிக்கப்படவில்லை. ஆனால் ஜனநாயகம் வளர்ச்சியடைந்து பரவியபோது மக்களின் நலனைப் பேணும் கருவியே அரசாங்கம் எனவும், அரசாங்க உத்தியோகத்தர்கள் மக்களின் விருப்பத்தைச் செயற்படுத்தும் பொதுச் சேவையாளர்கள் என்ற கருத்தும் பரவலாயிற்று. பொதுசன அபிப்பிராயத்தின் வளர்ச்சியும், அதிகாரமும் அதனை வெளிப்படுத்துவதற்கான முறைகளின் அபிவிருத்திக்கும் இதுவே மூல காரணமாகும்.

பொதுசன அபிப்பிராயம் என்பது வழமையாகக் குழப்பமான பொது அபிப்பிராயங்களது கூட்டாகவே இருக்கும். அபிப்பிராயம் என்பது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் விடயத்தைப் பற்றிய சரியான அறிவையும் ,ஆழமான சிந்தனையின் பின்பு எடுத்துக் கொள்ளும் முடிவு அல்லது தீர்ப்பையும் வேண்டி நிற்கின்றது. பெரும்பாலானவர்கள் மற்றவர்களால் உருவாக்கப்பட்ட எண்ணங்களை ஏற்று அவை தமது எண்ணம் என நம்புகிறனர். பொது அபிப்பிராயம் வழமையாகச் சிறிய குழுவான தலைவர்களாலே உருவாக்கப்படுகின்றது.

அரசியல் தலைவர்களது தீர்க்கதரிசனம், பொதுநலன் என்பவற்றிலேயே பொது அபிப்பிராயத்தின் பலம் தங்கியுள்ளது. பிரச்சினைக்குரிய விடயத்தின் விசேட அறிவினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒழுங்குபடுத்தப்பட்ட அபிப்பிராயமே அரசாங்கத்தின் தேவைக்கான, தாக்கமான பொது அபிப்பிராயமாக அமையும்.



**பொதுசன அபிப்பிராயத்தினை உருவாக்கும் முகவர்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.**

1. புதினத்தாள்கள் (பத்திரிகைகள்) சஞ்சிகைகள், புத்தகங்கள், (சிறந்த முறையில் பொதுசன அபிப்பிராயம் உருவாக்கப்பட வேண்டுமாயின் இவை பக்கச்சார்பின்றி நடக்க வேண்டும்)
2. வானொலி
3. தொலைக்காட்சி

நவீன காலத்தில் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதில் முக்கிய பங்களிப்பினை வழங்கும் தொடர்புச் சாதனங்கள் இவையாகும். ஆனால் பெரும்பாலும் இன்று மூன்றாம் உலக நாடுகளில் அரசாங்க சார்பான கருத்துக்களையே இவை பரப்பி வருவதினால் பொதுசன அபிப்பிராயத்தின் நடுநிலைமையைப் பேணுகின்றனவா? என்ற வினா தோன்றியுள்ளது.

4. சுவரொட்டிகள்.
5. துண்டுப் பிரசுரங்கள்.
6. பிரசார செய்தி வெளியீடுகள்.
7. மேடைப் பேச்சுகள்.
8. பொது தனியார் முகவர்கள்.

**பொதுசன அபிப்பிராயம் தாக்கமானதாகவும் பலமானதாகவும் இருக்க வேண்டிய முன் நிபந்தனைகள்**

1. பொதுமக்கள் புத்திசாலிகளாகவும் பொது விடயங்களில் ஈடுபாடு உள்ளவர்களாகவும் இருத்தல்.
2. மக்கள் ஒருமைப்பாடுள்ளவர்களாகவும், பொதுநலனுடையவர்களாகவும் இருத்தல்.
3. இன, மத வர்க்க வேறுபாடுகள் பாரிய அளவில் இடம் பெறாது இருத்தல்.
4. அரசாங்க இயல்புகள் பற்றியும் தேசிய இலக்குகள் பற்றியும் மக்களுக்கிடையே ஒருவித ஒருமைப்பாடு நிலவுதல்.
5. பொதுசன தொடர்புச் சாதனங்கள் நடுநிலைமைப் போக்குடன் செயலாற்றல்.
6. அபிப்பிராயம் தெரிவிக்கும் உரையாடும் சுதந்திரம் நிலவுதல்.
7. சிறுபான்மைக் குழுக்களுக்கு சமாதானமான முறையில் தமது கருத்துக்களை வெளியிடக்கூடிய உரிமை இருத்தல்.
8. அபிப்பிராயங்களைச் சுதந்திரமாக வெளியிடக்கூடிய சூழல் இருத்தல் பொதுவாக ஒரு சனநாயக அரசின் வெற்றி பலம்வாய்ந்த பொதுசன அபிப்பிராயத்திலேயே தங்கியுள்ளது.

#### ஆ) பாஸிஸம்.

பாஸிஸம் இத்தாலியில் தோன்றியது. பாசஸ் எனும் இலத்தீன் மொழிச் சொல்லுக்கு கட்டு எனப் பொருள்படும். அரசின் அதிகாரத்தை பயன்படுத்தி அரசுக்காகத்தான் தனி மனிதன் என்ற தத்துவத்தைப் பிரதிபலிக்கும் கோட்பாடாகவே பாஸிஸத்தைக் கொள்ளலாம்.

முதலாம் உலகப் போரின் பின்னர் இத்தாலியில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தன. அவற்றைச் சாதகச் சூழ்நிலைகளாகப் பயன்படுத்தியே இத்தாலியைச் சேர்ந்த பெனிட்டோ முஸோலினி என்பவன் இக் கோட்பாட்டை வளர்த்து ஆட்சியைக் கைப்பற்றினான்.

முதலாம் உலகப் போரின் பின்னர் அமைதி உடன்படிக்கை காரணமாக வஞ்சிக்கப்பட்ட ஜெர்மனியர்கள் வஞ்சம் தீர்க்கும் உணர்விற்கு வாழ்வளித்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய அடால்ப் ஹிட்லர் வகுத்த கொள்கை நாஸிஸம் என அழைக்கப்படுகிறது.

ஆனால் பாஸிஸமும் நாஸிஸமும் வெவ்வேறு கோப்பைகளில் ஊற்றப் பட்ட ஒரே விதமான நச்சுத் திரவங்கள் என அரசியல் அறிஞர்கள் விமர்சிப்பர். ஏனெனில் பாஸிஸம், நாஸிஸம் இரண்டிற்குமிடையிலான தோற்றம் தோற்றத்தின் பின்னணி தன்மை, செயற்பாடு, போக்கு அனைத்தும் ஒத்த தன்மை மிக்கவையே என்பது அவதானிக்கப்படல் வேண்டும்.

## இத்தாலியில் பாஸிஸ்ட் கட்சி தோற்றம் பெற்று வெற்றியடைந்தமைக்கான காரணங்கள்

பெனிடோ முசோலினி 1893 ல் ஒரு ஏழ்மையான கொல்லர் குடும்பத்தில் பிறந்தவராவார். இளம் பராயம் முதலே மாக்ஸிய கொள்கையினால் கவரப்பட்ட இவர் பின்னர் மாக்ஸிஸத்தை வெறுத்து 1919 ஒரு கட்சியை அமைத்தார். சோஸலிசத்திற்கு எதிராக இருந்த இவரது பாஸிஸக் கட்சி 1921ல் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு ஓரளவு வெற்றி பெற முடிந்தாலும் கூட 1922ல் இத்தாலியில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களைப் பயன்படுத்தி நாட்டின் பிரதமரானார். பின்னர் தனது நிலையைத் திடப் படுத்திக் கொண்டு சர்வாதிகாரியாகினான். பாஸிஸ்ட் கட்சியும் இவனது பாஸிஸக் கொள்கைகளும் வெற்றியடைந்தமைக்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்

1. 1ம் உலகப் போரில் இத்தாலி போதிய நன்மைகளைப் பெறாமை
2. இத்தாலிய சமூகத்தில் மூலாதாரமான ஒற்றுமை நிலவியிராமை
3. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார தோல்விகளும் பஞ்ச நிலையும்
4. பாராளுமன்ற ஜனநாயகம் வேர்கொள்ளாமை,
5. சோசலிச நடவடிக்கையால் மத்திய தர வர்க்கம் சந்தேகப் பட்டமை
6. வேலையில்லாப் பிரச்சினை

இந் நிலைமைகளைப் பயன்படுத்தி இத்தாலிக்கு ஓர் உயர்ந்த நிலையைப் பெற்றுத் தருவதாகவும், இத்தாலியின் பழைமையைப் பேணுவதாகவும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகவும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளால் பாஸிஸக் கட்சி மீது மக்கள் நம்பிக்கை கொள்ளலாயினர் பாஸிஸம் வளர இது முக்கிய காரணியாற்று.



## பாஸிஸக் கருத்துக்கள்

அரசு தான் எல்லை அரசுக்காகத்தான் தனி மனிதன், இதுவே பாஸிஸத்தின் அடிப்படைக் கொள்கை யாகும். அரசு முழுமையானது, இது எவராலும் எதிர்க்கப்பட முடியாதது, ஒவ்வொன்றும் அரசுக்காகவே, அரசுக்கு எதிராகவோ அரசுக்கு வெளியிலோ எதுவுமில்லை மனித வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் ஒழுங்கு செய்யவும் கட்டுப் படுத்தவும் வலிமை பெற்றது. அரசு, பொருளாதார விடயங்களில் முழுமையான கட்டுப்பாட்டு அதிகாரம் அரசுக்கு உண்டு.

அரசு மனமுவந்து ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்ததல்ல. அரசின் அடிப்படையே வன்முறையின் வலிமை தான். வன்முறைக்குப் பயந்துதான், மனிதர்கள் சில விடயங்களை ஒப்புக்கொள்கிறார்கள். இறைமை மக்களிடம் இல்லை இது அரசிடமே இருக்கிறது. மக்களாட்சி ஒருமூடத்தனமான ஊழல் நிறைந்த மிகவும் மெதுவாகச் செயற்படுகின்ற நடைமுறைக்கு ஒவ்வாத திறமையற்ற ஆட்சிமுறை. அதுவொரு அழுகிக்கொண்டிருக்கும் பிணத்தை போன்றது. பாராளுமன்றங்கள் வெறும் பேச்சுச் சந்தைக் கூட்டங்களே. சிந்தனைத் தெளிவற்ற பலரும் வாக்குரிமை பெறுவதால் மக்களாட்சியில் நல்ல அரசாங்கம் அமைய முடியாது. முதலாளித்துவமும் சோசலிசமும் தவறான கொள்கைகள். போர் உலகில் தவிர்க்க முடியாத ஒன்று. சர்வதேச அமைதி என்பது கோழையின் கனவு. பாஸிஸக் கோட்பாட்டின் சாராம்சம் இதுவாகும்.

## குறைகள்

முற்போக்குக் கருத்துக்களுக்கெதிரானது அது மக்களாட்சி சோசலிசம் லிபரசம், சர்வதேச அமைதி, தனிமனித சுதந்திரம், போன்ற நல்ல அம்சங்களை எதிர்த்து வன் முறையும் போரும் பாஸிஸத்தால் போற்றப்பட்டன. அதன் காரணமாகவே 2ம் உலகப் போரின் அழிவு நாடகத்திற்கு முசோலினியும், ஹிட்லரும் ஒத்திகை நடத்தினர். வன் முறைச் சித்தாந்தத்தின் அடித்தளத்தில் கோட்டை கட்டுபவர்கள் நீண்ட காலம் வாழ முடியாது என்பதை மெய்ப்பித்து முசோலினி வீழ்ந்தான்

## நிறைகள்

1ம் உலகப் போரின் முடிவில் இத்தாலி பவ்வேறு குழப்பங்களில் சிக்கித் தவித்தது. பாஸிஸ ஆட்சி ஏற்பட்ட பின்னர் குழப்பங்கள் தீர்ந்தன. சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது. பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டது இராணுவம் வமை பெற்றது. இத்தாலி உலக நாடுகளுக்கிடையே ஒரு முக்கியமான நாடு எனும் நிலையைப் பெற்றது.

## வினா _12

**மொன்டெஸ்கியுவின் அதிகரப் பிரிவினை கோட்பாடு பற்றி கருத்துரை வழங்குக**

### விடைக்குறிப்புகள்

**அரசாங்கமொன்றின் அதிகாரங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப் படுகின்றன. அவை**

1. சட்டவாக்கம் 2. நிர்வாகம் 3. நீதி என்பனவாகும்

இம் மூன்று துறைகளும், அவற்றின் அதிகாரங்களும் எவ்வாறு பிரிக்கப்பட்டு வெவ்வேறு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதை விளக்கும் கோட்பாடே அதிகாரப்பிரிவினைக்கோட்பாடாகும்.

அரசாங்கமொன்றின் நடத்தைகள் விளைவாக இச் செயற்பாடு அமைவதால் அரசறிவியலில் முக்கியத்துவம் பெறும் ஒரு நடவடிக்கையாகவும் அண்மைக் காலங்களில் முக்கியப்படுத்தப்படுமொரு கோட்பாடாகவும் இது விளங்குகிறது.

அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு பற்றி மிகவும் தெளிவானதும் ஆணித்தரமானதுமான கருத்தினை ·முன்வைத்தவர் மொன்டெஸ்கியூ (Motesquieu 1689-1755) எனும் பிரான்சிய அறிஞராவார். 1748ல் இவரால் வெளியிடப்பட்ட சட்டத்தின் உயிர் (The Spirit of Laws) எனும் நூலில் இவரது விளக்கங்களைக் காண முடிகிறது.

இவரது விளக்கத்தின் படி சட்டத்துறை அதிகாரங்களும் நிர்வாகத்துறை அதிகாரங்களும் ஒருவரிடமோ அல்லது ஒரு குழுவினரிடமோ சேர்ந்திருக்குமானால் அங்கு சுதந்திரம் இருக்க முடியாது எதிர்காலம் பற்றிய சந்தேகமும் பயமுமே எழும் நேர்மையற்ற முறையிலான சட்டங்கள் இயற்றப்பட்டு கொடுங்கோன்மை ஆட்சி நடைபெறும். மேலும் நீதித்துறை அதிகாரங்கள் சட்டத்துறை நிர்வாகத்துறை ஆகியவற்றிலிருந்து பிரிக்கப்படாவிட்டாலும் அங்கு சுதந்திரம் நிலவ முடியாது.

அது சட்டதுறையோடு இணைந்திருக்குமாயின், குடிகளின் வாழ்வும் சுதந்திரமும் சர்வாதிகார முறையில் கட்டுப்படுத்தப்படும் நீதி வழங்குபவனே அங்கு சட்டத்தை ஆக்குபவனாகவும் இருப்பான். இவ்வாறில்லாமல் அது நிர்வாகத்துறையுடன் இணைந்திருக்குமானால் அங்கு பலாத்காரமும் அடக்குமுறையுமே இடம்பெறும். எனவே ஓர் அரசாங்கத்தின் இந்த மூன்று துறைகளுமான அதாவது சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறைகளின் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டிருக்க வேண்டியது சுதந்திரத்திற்கு அவசியமானதாகும்.



ஒவ்வொரு அரசறிவியல் அறிஞனும் தான் வாழக்கூடிய சமூக சூழ்நிலைகளுக்கேற்ப கருத்துக்களை முன்வைப்பர். அது போல் மொன்டெஸ்கியூ வாழ்ந்த காலச் சூழ்நிலையே இந்த அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டிற்கு மூல காரணம் எனலாம். பிரான்சியரான மொன்டெஸ்கியூ பிரான்ஸில் காணப்பட்ட கொடுங்கோன்மை ஆட்சி முறைக்கு மன்னனிடத்தே அதிகாரங்கள் அனைத்தும் குவிந்திருந்தமையே காரணம் என்பதை உணர்ந்திருந்தார்.

இக்கட்டத்தில் இங்கிலாந்தில் நிர்வாக அதிகாரங்கள் மன்னனிடமும் (கெபினட் முறை வளர்ச்சியடைந்திருக்கவில்லை) சட்டவாக்கம் பாராளுமன்றத்திடமும், நீதித்துறை நீதிபதிகளிடமும் காணப்பட்டது இங்கிலாந்தில் நிலவிய அமைதிக்கு அதிகாரப் பிரிப்பும், பிரான்சின் கொடுங்கோன்மைக்கு அதிகாரக் குவிப்பே காரணம் என்பதை ஏற்றுக் கொண்ட மொன்டெஸ்கியு 1748ம் ஆண்டில் அதிகார பிரிப்பின் அவசியம் பற்றிக் கருத்துரை வழங்கினார்.

மொன்டெஸ்கியுவின் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடானது அரசாங்கத்தின் இந்த மூன்று துறைகளின் அதிகாரங்களும் முழுமையாக வேறு படுத்தப்பட்டிருக்க வேண்டுமா? அல்லது அவற்றிடையே சில வகையான தொடர்பும் வரையறுக்கப்பட்ட வேறுபாடும் இருக்க வேண்டும் என்று கூறுகின்றதா என்பது பற்றி அரசியல் மாணவர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன.

அரசாங்கத்தின் அலுவல்களைச் சட்ட ஆக்கம், நிர்வாகம் நீதிப் பரிபாலனம் என மூன்றாகப் பிரித்து அவற்றின் அதிகாரங்கள் வெவ்வேறு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும், அவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தால் தனி மனித சுதந்திரத்திற்கு அவசியமானதென்றும் மொன்டெஸ்கியு கூறினாலும் இம் மூன்று துறைகளும் முற்றாக வேறு படுத்தப்பட்டு ஒன்றுடனொன்று தொடர்பற்ற முறையில் இயங்க வேண்டுமென்று அவர் ஒரு போதும் கூறவில்லை. ஆகவே அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டில் வலியுறுத்தப்படுவது என்னவெனில் ஓர் அரசாங்கத்தின் மூன்று துறைகளும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் அதிகாரங்கள் வெவ்வேறு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதும் ஒரு துறை மற்றொரு துறையின் மீது அதிகாரமோ, செல்வாக்கோ செலுத்தக்கூடாது என்பதுமாகும்.

தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் கொடுங்கோன்மை ஆட்சியைத் தவிர்க்கவும் இத்தகைய பிரிப்பு அவசியமானதாகும்.

மொன்டெஸ்கியுவினால் முன்வைக்கப்பட்ட அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு 1787ம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசியலமைப்பில் முதன் முதலாக புகுத்தப்பட்டது இதனைத் தொடர்ந்து 1789ம் ஆண்டில் வெளியிடப்பட்ட பிரான்சிய உரிமைப் பிரகடனத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அதிகாரப் பிரிவினை நிலைபெறாத சமூகத்தில் அரசியலமைப்பு இல்லை.**

1792ல் அமைக்கப்பட்ட பிரான்சின் 1ம் குடியரசும் இந்த அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே அமைக் கப்பட்டது. இன்று அரசாங்க அலுவல்கள் நாளுக்கு நாள் பெருகிவந்தாலும் பல தேவைகளை இன்றைய பொதுநல அரசுகள் கவனிக்க வேண்டி இருப்பதாலும் எல்லா அலுவல்களையும் ஒரு துறையின் கீழ் செய்வதால் குழப்பங்கள், சிக்கல்கள் ஏற்பட இடமுண்டு. எனவே நவீன அரசுகளுக்கு அதிகாரப் பிரிவினை அத்தியாவசியமாக உள்ளது. இதனடிப்படையில் சட்டத்துறை சட்டமியற்றுவதையும், நிர்வாகத்துறை நிர்வாகம் புரிவதையும், நீதித்துறை நீதி வழங்கலையும் செய்கின்றது என்று பரந்த நோக்கில் கூறலாம்.

## வினா - 13.

**ஐக்கிய அமெரிக்காவுடன் விசேடமாகத் தொடர்பு படுத்தி வலுவேறாக்கக் கோட்பாட்டை ஆராய்க.**

### விடைக்குறிப்புக்கள்

ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பில் தந்தை எனக் கூறப்படும் மடிசன், பிராங்கிலின் பெஞ்சமின் போன்றோர் மொன்டெஸ்கியுவினால்முன் வைக்கப்பட்ட அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை நன்கு அறிந்தவர்களாகவும் அக் கோட்பாட்டால் கவரப்பட்டவர்களாகவும் காணப்பட்டனர்.

எனவே அதிகாரப் பிரிவினையை முதன்முதலில் யாப்பில் ஏற்றுக் கொண்ட பெருமையை ஐக்கிய அமெரிக்கா பெற்றுக்கொள்கிறது. இதன் முதல் மூன்று சரத்துக்களும் முறையே சட்டம், நிர்வாகம், நீதி ஆகிய துறைகளை வேறுபட்ட அமைப்புகளிடம் ஒப்படைக்க முனைந்துள்ளது.



யாப்பின் பிரகாரம்

**1) சரத்து - i. சட்டமியற்றும் அதிகாரம்**
இரண்டு வருட காலத்திற்கெனத் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் சபை ஆறு வருட காலத்திற்கெனத் தெரிவு செய்யப்படும் செனட்சபை என்ற இரு சபைகளையும் கொண்ட காங்கிரசிடம் வழங்கப்பட்டுள்ளது.

**2) சரத்து - ii. நிர்வாகத்துறை அதிகாரம்**
நான்காண்டுகளுக்கொருமுறை மக்களால் தேர்தெடுக்கப்படும் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டுள்ளது.

**3) சரத்து– iii. நீதித்துறை**
உயர் நீதிமன்றத்திடமும், அதனைச் சார்ந்த நீதிமன்றங்களிடமும் வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவில் சட்டவாக்கத்திற்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ள இரு மன்றங்களையுடைய காங்கிரஸ் நீதித்துறை, நிர்வாகத்துறை என்பவற்றில் தலையிடாது சுதந்திரமாகச் செயற்படுகின்றதெனக் கூறக்கூடிய வகையில் அமைப்புரீதியாக வேறாக்கப்பட்டுள்ளது. அதேபோல் அமெரிக்க அரசியலமைப்பு ஜனாதிபதித்துவ நிர்வாகமுறையை நிறுவியுள்ளமையாலும் நிர்வாகத்துறையின் தலைவராக ஜனாதிபதியே விளங்குவதனாலும் நிர்வாகத்துறைசார்ந்த ஜனாதிபதியோ, அமைச்சர்களோ, சட்டமன்றமான காங்கிரஸ்சின் உறுப்பினர்களாகவோ காங்கிரசின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவர்களாகவோ தொழிற்படுவதில்லை.

அமெரிக்க ஜனாதிபதி காங்கிரசின் உறுப்பினராக இல்லாத போதிலும் கூட காங்கிரஸ் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளாத போதும் நாட்டின் தலைவர் என்ற ரீதியில் சில சட்டங்களை இயற்றும்படி காங்கிரசிற்குப் பரிந்துரை செய்யவும் காங்கிரசிற்கு நிர்வாகக் கட்டளைகளை அனுப்பவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் இருந்தபோதிலும் கூட காங்கிரஸ் அதனை ஏற்க மறுக்கலாம். ஏனெனில் சட்டத்துறையானது ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதொரு நிறுவனமல்ல. இந்நிலையில் காங்கிரசைக் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி பெற்றிருக்கவில்லை.

இவ்வாறே நீதித்துறையின் அதிகாரங்களும் பெருமளவில் காங்கிரசின் நடவடிக்கைகளைப் பாதிக்கவில்லை. எனவே ஓரளவில் நிர்வாக நீதித்துறைகளின் தலையீடுகளின்றி சட்டத்துறை தனது அதிகார வரம்புக்குள் நின்று தொழிற்பட முடியுமென்று எதிர்பார்க்கலாம்.

அமெரிக்காவில் உண்மையான நிர்வாகம் ஜனாதிபதியை மையமாகக் கொண்டிருக்கிறது. இங்கு ஜனாதிபதி தேசிய ரீதியாக நடாத்தப்படும் தேர்தலொன்றினால் தேர்தற் கல்லூரியினூடாக மக்களினால் தேர்வு செய்யப்படுவார். பின்னர் ஜனாதிபதியின் விருப்பத்திற்கிணங்கவே அமைச்சரவை அமைக்கப்படும். (அமைச்சரவை உறுப்பினர்கள் ஜனாதிபதியின் ஆதரவாளர்களாகவோ கட்சியின் ஆதரவாளர்களாகவோ இருப்பர்) . எனவே அமைச்சரவை அமைச்சினைப் பொறுத்த மட்டில் சட்டத்துறையான காங்கிரசுடன் ஜனாதிபதி எவ்வித தொடர்பினையும் கொண்டிருக்கவில்லை, என்பதினால் ஜனாதிபதியோ அமைச்சர்களோ காங்கிரசுக்குப் பொறுப்புடையவர்களல்ல. எனவே ஜனாதிபதியின் கட்சி காங்கிரசில் பெரும்பான்மைப் பலத்தை இழந்தாலும் கூட ஜனாதிபதியோ அமைச்சரவையோ பதவி விலக வேண்டிய அவசியமில்லை. இருப்பினும் ஜனாதிபதியைக் குற்றத்தின் பேரில் விசாரணை செய்யும் அதிகாரத்தைக் காங்கிரஸ் பெற்றுள்ளது .

அமெரிக்கா ஒரு சமஸ்டி நாடு . எனவே அமெரிக்காவின் நீதித்துறையின் சுதந்திரமானது உறுதி செய்யப்பட்டுள்ளதைக் காணமுடியும். அமெரிக்க நீதிமன்ற நடவடிக்கை பற்றி காங்கிரசோ , ஜனாதிபதியோ , விசாரணை செய்தல் முடியாது. நீதிபதிகள் காங்கிரசுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய அவசியமில்லை. செனட்டின் அங்கீகாரத்துடன் உயர் நீதிபதிகளை ஜனாதிபதி நியமித்தபோதிலும் கூட இவர்களைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரத்தை ஜனாதிபதி பெற்றிருக்கவில்லை.

மேலும் நன்னடத்தை உள்ளவர்களாக இருக்கும் வரை ஆயுள் பூராவும் நீதிபதிகள் பதவிவகிக்க முடியுமெனவும் யாப்பு கூறுகின்றது. அதே போல பதவிக் காலத்தில் நீதிபதிகளின் சம்பளத்தைக் குறைக்க முடியாது . இவைகள் அமெரிக்காவின் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் விடயங்களே.

## வினா - 14

**மொன்டெஸ்கியுவின் வலுவேறாக்கக் கோட்பாட்டை இன்றைய நடைமுறை அரசாங்கங்களில் காண முடியாது இக் கூற்றை ஐக்கிய அமெரிக்காவுடன் தொடர்பு படுத்தி ஆராய்க.**

## விடைக் குறிப்புகள்

அமெரிக்க அரசியலமைப்பின் சிறப்புப் பண்பாக வலுவேறாக்கம் அமையுமாயின் அதன் வெளிப்படையான பண்பாக சமநிலைத் தலையீடுகள் அமைகின்றன.



மொன்டெஸ்கியுவின் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டால் கவரப் பட்ட அமெரிக்க யாப்பை வரைந்தவர்கள் கோட்பாட்டை ஏற்றுக் கொண்ட போதிலும் கூட அரசாங்கத்தின் அதிகாரத்தைச் செயற்படுத்த சட்ட, நிர்வாக, நீதித்துறைகளிடம் தொடர்பிருக்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்திருந்தனர். அதிகாரங்கள் பிரிக்கப்படவேண்டியது தனிமனித சுதந்திரத்திற்கு அவசியமென்றாலும் கூட அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு இத்துறைகளுக்கிடையிலான ஓரளவு தொடர்பும் அவசியமாகும். முற்றுமுழுதாக இந்த மூன்று துறைகளும் பிரிக்கப் பட்டிருப்பின் அரசாங்க செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்து விடும் என்பது மறுக்கமுடியாது.

இதனால் தான் அரசாங்கத் துறைகளிடையே சமநிலைத் தலையீடொன்றைச் செய்வதன் மூலம் அரசியலமைப்பில் வலுவேறாக்கல் நடவடிக்கையை ஓரளவு கடைப்பிடிக்க முயன்றுள்ளதை அவதானிக்கலாம் இங்கு சமநிலைத் தலையீடு எனும் போது அரசாங்கத்தின் ஒவ்வொரு துறைகளும் ஒன்றினது ஒத்துழைப்பின்றி மற்றையது தொழிற்பட முடியாதென்பதுடன், ஒரு துறை சுதந்திரமுடையதாக அமைந்து தனது சர்வாதிகாரத்தை நிலை நிறுத்த முடியாதென்பதையும் குறிப்பிடுகிறது.

சுருக்கமாகக் கூறுவதாயின் அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையும் மற்றைய துறைமீது பகுதியளவிலான கட்டுப்பாடுகளைச் செலுத்துவதிலும் அதன் மூலம் ஏதோவொரு துறையானது தனது சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதைத் தடை செய்வதைக் குறிப்பாகவும் அமைகின்றது.

### சமநிலைத் தலையீடுகள் செயற்படும் முறை

1. நிர்வாகத்திற்கு பொறுப்பானவர் ஜனாதிபதியாவார். இவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராதலால் காங்கிரசின் உறுப்பினரோ, கட்டுப்பட்டவரோ என்று கூறமுடியாது. இருப்பினும் நிர்வாகத்திற்குப் பொறுப்பான ஜனாதிபதி சட்டவாக்கத்திற்குப் பொறுப்பான காங்கிரசைப் பின்வரும் வழிகளினால் கட்டுப்படுத்துவார்.

அ) காங்கிரசின் விசேட கூட்டங்களைக் கூட்டுதல்

ஆ) காங்கிரசுக்கு விசேட செய்திகளை அனுப்புதல் (ஜனாதிபதியின் விசேட செய்திகளுக்கு காங்கிரஸ் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது.)

இ) காங்கிரஸ்சினால் இயற்றப்படும் மசோதாக்களுக்குக் கையொப்பமிட்டு சட்ட அதிகாரம்வழங்குதல்(ஜனாதிபதிதன்னுடையவீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி காங்கிரசினால்.. உருவாக்கப்பட்ட மசோதாவைத் தடுக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளார். ) காங்கிரசின் தான்தோன்றித்தனமான போக்கினை இது கட்டுப்படுத்தும் எனக் கூறப்படுகின்றது (இவ்வாறு தடை செய்யப்பட்ட ஒரு மசோதாவினை காங்கிரசின் இரு சபைகளும் பெரும்பான்மையுடன் மீண்டும் அம்மசோதா சட்டமாக்கப்பட வேண்டுமென விரும்பினால் அது சட்டமாகும்.)

எவ்வாறாயினும் இவ் ஏற்பாடானது சர்வாதிகாரப் போக்கில் செல்ல முற்படும் ஒரு சட்டசபையின் அதிகாரத்தில் ஒரு வித தலையீட்டினை ஏற்படுத்தி அரசாங்கத்தின் ஏனைய துறைகளின் அதிகாரத்துடன் சமநிலையைப் பேணிக் கொள்ளும் ஒரு முயற்சியாகும்.

மேலும் நீதித்துறையும் உயர் நீதிமன்றமும் காங்கிரசின் நடவடிக்கைகள் மீது தலையீடு செய்ய சிலவகையான சிறப்புரிமைகளைப் பெற்றுள்ளன. நாட்டின் அரசியலமைப்புக்கு முரணான சட்டங்களைக் காங்கிரஸ் ஆக்கினால் நீதிப்புனராய்வு அதிகாரத்தைப் பயன்படுத்தி அச்சட்டத்தை வலிதற்றதாக்க கூடிய அதிகாரத்தை நீதித்துறை பெற்றுள்ளது.

2. ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியின் மேலாதிக்கம் தான் தோன்றித் தனமாக அமையாதவகையிலும் சமநிலைத் தலையீடுகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன.

அ) ஜனாதிபதியால் வழங்கப்படும் உயர் பதவிகளுக்கும் நியமனங்களுக்கும் வெளிநாட்டு உடன்படிக்கைகளுக்கும் சட்டத்துறையான காங்கிரஸின் செனட் சபையின் ஒப்புதல் அவசியமானது.

ஆ) ஜனாதிபதியைக் குற்ற விசாரணை ஒன்றின் தீர்ப்பின் அடிப்படையில் பதவிநீக்கம் செய்யும் அதிகாரத்தையும் காங்கிரஸ்பெற்றுள்ளது.

இ) அரசியலமைப்பு விதியை மீறிய குற்றச்சாட்டுக்காக அல்லது இராஜ துரோக குற்றச்செயல்களுக்காக ஜனாதிபதியின் மீது குற்ற விசாரணையை மேற்கொள்ளும் அதிகாரம் காங்கிரசுக்கு உண்டு (காங்கிரசின் பிரதிநிதிகள் சபையில் இவ்விசாரணை தொடுக்கப்பட்டு செனட் சபையில் விசாரிக்கப் படும். விசாரணை முடிவில் செனட்சபை உறுப்பினர்களில் 2/3 பங்கினரின் விருப்புடன் குற்றப் பிரேரணை நிறைவேற்றப்படின் ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யப்படலாம்)

3. நீதித்துறையின் மீதான கட்டுப்பாடுகள் நீதித்துறை நடவடிக்கைள் மீதும் சமநிலைத் தலையீடுகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

அ) உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் சமஸ்டி நீதிபதிகளும், செனட்டின்க்கும் அனுமதியுடன் ஜனாதிபதி நியமனம் வழங்குவர்.

ஆ) குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனையைக் குறைத்து, நீக்க மாற்றக் கூடிய ஜனாதிபதியின் அதிகாரம்.

இ) நீதித்துறையில் காங்கிரஸின் தாக்கங்கள்.

1. உயர்நீதிமன்றத்தில் அதிகார உயர் வரம்பை நிர்ணயித்தல்
2. நீதிபதிகளின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்
3. நீதிபதியின் வேதனம் சலுகைகளை நிர்ணயித்தல்
4. கீழ் நிலை நீதிமன்றங்கள் உருவாக்கலும் ரத்துச் செய்தலும்
5. கீழ்நிலை நீதிமன்றங்களின் மேன்முறையீட்டு வழக்குகளைத் தீர்மானித்தல்
6. துர்நடத்தை, அரசியலமைப்பை மீறிய குற்றச்சாட்டுக்காக நீதிபதிகளைக் குற்ற விசாரணை செய்தல்.



எனவே தொகுத்து நோக்குமிடத்து ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பில் முதல் மூன்று சரத்துக்களிலும் அதிகாரப் பிரிவினை காட்டப்பட்டுள்ள போதிலும் கூட சமநிலைத் தலையீடுகள் காரணமாக சட்டம், நிர்வாகம், நீதி ஆகிய துறைகளிடையே சில தொடர்புகள் இருப்பதை அவதானிக்கலாம். இத் தொடர்புகள் தவிர்க்க முடியாதவை.

**பிற்குறிப்பு**

இன்றைய நவீன அரசுகளின் அரசியலமைப்புக்களில் அதிகாரப் பிரிவினை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள போதிலும்கூட சமநிலைத் தலையீடும் கணிசமாக இடம் பெறுகின்றது. பொதுவாக அதனை மூன்றுவிதமாக நோக்கலாம்.

1. ஜனாதிபதி ஆட்சிமுறை நிலவும் நாடுகளில் அனேகமாக நிர்வாகத்துறையாக ஜனாதிபதியும் சட்டவாக்கத்துறையாக மக்கள் பிரதிநிதிகள் சபையும் நீதித் துறையாக நீதிமன்றங்களும் காணப்படுகின்றன. அமைப்பில் இவை பிரிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.
2. கெபினட் ஆட்சிமுறை நிலவும் நாடுகளில் அநேகமாக நிர்வாகத்துறைக்குப் பொறுப்பாக பிரதமரும் அமைச்சர்களும் சட்டவாக்க சபைக்குள்ளே இருப்பதைக் காணலாம். இந்த நீதித்துறை அமைப்பளவில் பிரிந்திருக்கும்.
3. கம்யூனிச நாடுகள் அருகிவிட்டாலும் கூட நிர்வாகம், சட்டம், நீதிபோன்ற முத்துறைகளும் கம்யூனிச நாடுகளில் ஒரு குழுவாலே நெறிப்படுத்தப்படு கின்றது . தொகுத்து நோக்குமிடத்து அரச செயற்பாடுகளில் நிர்வாகம், சட்ட வாக்கம் ஆகிய இரு துறைகளும் அனேகமாக இன்று இணைந்தே செயற்படு கின்றன. ஆனால் நீதித்துறை மாத்திரம் ஓரளவு பிரிந்தே செயற்படுவதைக் காண முடிகிறது எவ்வாறாயினும் மன்னராட்சியில் காணப்பட்ட சர்வாதிகாரத் தன்மைகள் எழாது ஓரளவேனும் மனித சுதந்திரங்களும் பேணப்பட அதிகாரம் பிரிவினைகளாக அமைந்துள்ளது. என்றால் மிகையாகாது.

## வினா - 15

**பின்வருவனவற்றுள் யாதாயினும் இரண்டைப் பற்றி சுருக்கக் கருத்துரை வழங்குக.**
**அ) ரூசோவின் பொதுச் சித்தம்   ஆ) சமத்துவம்   இ) நீதித்துறை**

### விடைக்குறிப்புக்கள்

அ) ரூசோவின் பொதுச் சித்தம்

சமூக ஒப்பந்தம் ஏற்பட்ட பின் சமூக அமைப்பும், அரசியல் அமைப்பும் தானாகவே ஏற்பட்டுவிடுகின்றன. சமூக ஒப்பந்தக் கோட்பாளரான ரூசோவின் கருத்துப்படி பொதுமக்கள் தம்மை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் தமது விருப்பை ஓர் அதிகாரியிடம் ஒப்படைத்தனர். அதனால் மக்கள் தமது பொதுவான விருப்பத்தின் படி அதிகாரத்தை ஒப்படைத்ததினால் பொது விருப்பு என்பது மக்களின் குரலாகவும், மக்களின் பிரதிபலிப்பாகவும் இருக்கின்றது.

இப்பொது விருப்பில் ஒவ்வொரு தனி மனிதனும் அங்கத்துவம் பெறுகிறான். அப் பயனால் அம் மனிதன் பூரணமாகவும், நிபந்தனையின்றியும் சரணடைந்து விடுகிறான். இதனால் அப்பொது விருப்பு மனிதனின் கூட்டு நலனுக்காகவே பயன்படுத்தப்படும் தனி மனிதனின் நலனுக்காகப் பயன்படுத்தப்படமாட்டாது.எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து எல்லோரது நலன்களையும் பேணுதல் எல்லோரது குரல்களையும் ஒருங்கு சேர்த்தல் பிரதிபலித்தல் போன்றவை பொது விருப்பின் தனித் தன்மைகளாகும்.

**பொது விருப்பினால் தோன்றும் அரசாங்கத்தின் பண்புகள்.**

**1. இறைமை**

பொது விருப்பால் தோன்றும் அரசு இறைமை உடையது. அந்த இறைமை பொது விருப்பினூடாகவே தோன்றியுள்ளது. எனவே அரசையும் இறைமையையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்தறிய முடியாதென்பது ரூசோவின் வாதமாகும்.

**2. சட்டம்**

பொதுவிருப்பின் சர்வாதிகாரத்தினூடாகவே சட்டம் பிறக்கிறது. இங்கு காணப்படும் அரசானது பொதுவிருப்பின் சர்வாதிகாரத்தின் முன் சாதாரண ஒரு அரசியல் நிலையாகும். மக்கள் அரசின் காரணங்களுக்குப் பொறுப்பானவர்கள் அல்ல அரசே மக்களின் பொறுப்பை அறிந்து பொறுப்பாக நடக்க வேண்டும். அதனால் தான் அரசின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டே அரசியல் சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

எனவே ரூசோவின் கருத்துப்படி சட்டங்களை இயற்றும் சக்தியை அரசாங்கத்திற்குக் கொடுக்க கூடாது. அது மக்களால் தான் இயற்றப்பட வேண்டும் என வலியுறுத்துகிறார். எனவே சட்டம் என்பது மக்களின் பொது விருப்பமே தவிர அதிகாரத்தைக் கைப்பற்றும் (அரசாங்கத்தைக் கைப்பற்றும்) அதிகாரம் உடையதல்ல.

**3. சுதந்திரமும், உரிமையும்**

பொது விருப்பத்தினூடாகவே சுதந்திரம் உரிமை என்பன பற்றி ரூசோ குறிப்பிடுகிறார். லொக் அரசின் வரையரையற்ற அதிகாரத்தை ஒழித்துவிட்டு மக்களுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தார். இக் கருத்தை எதிர்க்கும் ரூசோ, மக்களால் நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் தனிமனிதன் விடுதலை செய்யப்பட்டு சுதந்திரமாக இருக்கின்றான், பொது விருப்பினூடாக மட்டுமே தனது உரிமைகளையும் சுதந்திரத்தையும் பெறுகிறான்.

தொகுத்து நோக்குமிடத்து பெரும்பான்மை மக்களின் விருப்பம் என்பதையே இவரது பொது விருப்பு காட்டுகிறது. இங்கு இறைமை மக்களிடம் இருக்கும் எனவும், மக்களுக்காகத்தான் அரசு என்றும், சட்டம் என்பது மக்களின் விருப்பம் என்றும் அச் சட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை மட்டுமே அரசாங்கம் கொண்டிருக்க முடியுமென்றும் ரூசோ கூறுகிறார்.[12]



தனி மனிதர்களது விருப்பங்களும் சிந்தனைகளும் வேறுபட்டிருப்பின் பொதுநலன் என்ற நோக்கில் அவற்றைத் தனிமனிதன் இழக்கத்தான் வேண்டும் எனக் கூறி ஒருவருக்காக எல்லோரும் எல்லோருக்குமாக ஒருவர் என்ற மக்களாட்சியின் அடிப்படையை விளக்குகின்றார். ரூசோவின் சிந்தனைகளை நோக்குமிடத்து அவர் முடி ஆட்சியை நிராகரித்து மக்களாட்சியை நிலை நிறுத்த முற்படுவதைக் காண முடிகிறது.

**ஆ) சமத்துவம்**

ஜனநாயக நாட்டில் மக்கள் தம் அடிப்படை உரிமைகளைப் பெற்று வாழ வேண்டும். ஆனால் அடிப்படை உரிமைகளை அரசியல் யாப்புக்களில் வரையறுப்பதனால் மாத்திரம் நாம் அவற்றை அனுபவித்து விட முடியாது மக்களிடம் சமத்துவம் ஏற்படும் போது தான் உரிமைகளும் அனுபவிக்கப்பட முடியும். எனவே உரிமைகள் சமத்துவத்துடன் தொடர்புடையன.

சமத்துவம் அரசியல், பொருளாதார, சமூக, நீதி சமத்துவங்களாக வகுக்கப்படுகின்றன . ஆனால் மேலைத்தேய, கீழைத்தேய ஜனநாயகக் கருத்துக்கள் மத்தியில் வேறுபாடு காணப்படுவதினால் சமத்துவம் பற்றிய கருத்துக்களிலும் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

கீழைத்தேய ஜனநாயகம் பொருளாதார சமத்துவத்தையே கூடுதலாக வற்புறுத்துகின்றது. தனிமனிதனுக்கு வருமானம் தரக்கூடிய சொத் துக்களைத் தேடுவதற்கோ பாதுகாப்பதற்கோ உரிமையற்றவர்கள் எனக் கூறுகின்றது உரிமைகள் யாவும் பொதுவாக இருக்க வேண்டும். இதன் மூலமாகப் பொருளதார சமத்துவத்தை ஏற்படுத்த முடியும்.

மேலும் அவன் திறமைக்கும் தகைமைக்கும் ஏற்ப கல்வி பெறவும் தொழில் செய்யவுமுள்ள திறமைகள் முறையே கல்விச் சமத்துவம், தொழில் சமத்துவம் எனப்படும். ஆனால் வருமான ஏற்றத்தாழ்வுகள் உள்ள நாட்டில் இச் சமத்துவம் ஏற்பட முடியாதென்பது சமவுடைமைவாதிகளின் கருத்தாகும்.

கொள்கை ஒற்றுமையுடையவர்கள் கட்சிகளை அமைக்கவும், தேர்தலில் போட்டியிடவும் உரிமை வழங்கப்பட்டிருப்பதே அரசியல் சமத்துவமென்று மேற்கத்திய ஜனநாயகம் கூறுகின்றது. ஆனால் அத்தகைய உரிமைகள் வழங்கப்படின் பொதுவுடைமைச் சித்தாந்தங்கள் சிதைந்து விடுமென சோசலிச நாடுகள் கூறுகின்றன.

சமூக, அரசியல் நீதி, சமத்துவம் என்பவற்றில் எல்லா ஜனநாயக நாடுகளும் பெருமளவு ஒற்றுமையான கருத்துக்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**இ . நீதித்துறை**

1. ஒரு அரசாங்கத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு பாரபட்சமற்ற நிர்வாகமும், நீதித்துறையின் சுதந்திரமும் அவசியமானதாகும். ஒரு அரசாங்கத்தின் சிறப்புக்கான சோதனை அதன் நீதித்துறையே -பிறைஸ்-
2. புராதான மன்னராட்சிக் காலங்களில் நிர்வாகத்தின் ஓர் அங்கமாகவே நீதித்துறைவிளங்கியது.
3. தற்காலத்தில் நீதித்துறையானது நிர்வாகத்துறையிலிருந்து ஓரளவு பிரிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.
4. தற்காலத்தில் நீதித்துறையானது மக்கள் உரிமைகளின் பாதுகாவலனாகத் திகழ்கிறது.
5. பொதுவாக நிர்வாகத்துறையின் தலைவர் (ஒன்றில் சுயேற்சையாக அல்லது சட்டமன்ற ஒப்புதலுடன் ) நீதித்துறையைச் சார்ந்தவர்களை நியமிக்கின்றார்.

**நீதித்துறையின் கடமைகள்**

1. அரசியலமைப்பு யாப்புச் சட்டம் வழக்காறு, அறநெறிக் கோட்பாடுகள், வழக்குத் தீர்ப்புக்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நீதி வழங்குதல்.
2. பக்கச் சார்பற்ற முறையில் நீதி வழங்குதல்.
3. யாப்பின் படி மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.
4. சமஸ்டி ஆட்சி முறையாயின் மத்திய -மாநில அரசுகளின் பிணக்குகளைத் தீர்த்தல்.
5. யாப்பிற்கு இறுதி விளக்கம் வழங்குதல்.
6. நீதிமன்றத் தீர்ப்புக்கள் சில நேரங்களில் சட்டமாக மாறலாம் இதனால் நன்கு விசாரித்த பின்பே தீர்ப்புக்கள் வழங்கப்படல் வேண்டும்.

## வினா - 16

**ஜனநாயகக் கோட்பாடுபற்றி நுணுக்கக் குறிப்புரையொன்று எழுதுக**

### விடைக்குறிப்புக்கள்

உலகில் காணப்படும் அரசியல் முறைக் கோட்பாடுகளுள் ஜனநாயகக் கோட்பாடும் ஒன்றாகும். பொதுவாக ஜனநாயகம் என்பது மக்களாட்சியைக் குறித்து நிற்கின்றது. சனநாயகத்தை குறிக்கும் ஆங்கிலச் சொல்லான Democracy என்பது Demos (மக்கள் ) Krata ( அதிகாரம் ) எனும் கிரேக்க சொற்களிலிருந்து பிறந்ததாகும்.

**சனநாயகம் பற்றிய சில வரைவிலக்கணங்கள்**

* மக்களால் மக்களுக்காக மக்களினால் புரியும் ஆட்சி முறையே சனநாயகமாகும். (அதாவது மக்களுக்காக மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட மக்களால் ஏற்படக்கூடிய அரசே மக்களாட்சியாகும்) -ஆபிரகாம் லிங்கன் -



* சாதாரண மனிதர்களும் அரசியல் தலைவர்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரத்தைப் பெற்றுள்ள ஆட்சி முறை சனநாயகமாகும்.
- ராபர்ட்டால் -
* எல்லோருக்கும் உரிய உரிமைகளை சிலர் உறுதிப்படுத்தும் ஆட்சி முறையே மக்கள் ஆட்சியாகும்.

பொதுவாக மக்களாட்சி முறையில் காணப்படும் சில அம்சங்கள் புராதன கிரேக்க உரோம, இந்திய, இலங்கை ஆட்சி முறைகளிலும் காணப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். எனினும் கோட்பாட்டு ரீதியாக இது வளர்ச்சிபெற்றது . சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்குட்பட்ட காலத்திலேயாகும்.

**மக்களாட்சி முறையின் முக்கிய அம்சங்கள்.**

இன்றைய மக்களாட்சி முறையின் முக்கிய அம்சங்களாக பின்வரும் இரண்டு விடயங்களைக் குறிப்பிடலாம்.

1. சமத்துவம்.      2. சுதந்திரம்.

**சமத்துவம்**

1. இதன் கருத்து உரிமைகளைப் பொருத்தமட்டில் எல்லோரும் சமம் என்பதாகும்.
2. அமெரிக்க சுதந்திர பிரகடனத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது "சகலரும் சம உரிமைகளுடன் படைக்கப்பட்டுள்ளனர் என்பதை ஒப்புக் கொள்கிறோம்."
3. 1789ல் பிரான்சின் உரிமைப் பிரகடனம் பின்வருமாறு கூறுகின்றது : "மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை சம உரிமைகளை உடையவன்."
4. இவற்றின் கருத்து குடிகள் என்ற வகையில் ஒவ்வொருவருக்கும் எல்லோருடைய உரிமைகளும் சமமாகும் என்பதாகும். குடியாட்சி வெற்றியளிக்க வேண்டுமானால் மக்களிடையே சமத்துவம் நிலவ வேண்டியது அவசியமாகும்.

**சுதந்திரம்**

அ) குடியாட்சி முறையில் மக்களுக்கு சுதந்திரம் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் ஒருவரது சுதந்திரத்தால் இன்னொருவரின் சுதந்திரம் பாதிப்படைதல் கூடாது.

ஆ) சுதந்திரத்தைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்
   1) அரசியல் சுதந்திரம்  2)பொருளாதார சுதந்திரம்  3)சமயசுதந்திரம்

**1.அரசியல் சுதந்திரம்**

அ) புராதன கிரேக்க ஆட்சிகளைப்போல இன்று நேரடியான மக்களாட்சி முறையைக் காண முடியாது. ஏனெனில் சனத்தொகைப் பெருக்கமும், நாடுகளது வியாபகமும் காரணமாகும்.

ஆ) எனவே இன்று காலத்திற்குக் காலம் நடைபெறும் தேர்தல்கள் மூலம் தமது சார்பில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து தமக்கு விருப்பமான அரசாங்கத்தை அமைத்துக்கொள்வதற்கு மக்கள் உரிமை பெற்றுள்ளனர். இது மக்களாட்சி முறையின் மிகவும் சிறப்பானதொரு விடயமாகும். எனவேதான் மக்களாட்சியில் அரசியல் சுதந்திரம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இ) இத் தேர்தல்களில் தமது பிரதிநிதிகளைச் சர்வசன வாக்குரிமை மூலம் தெரிவு செய்துகொள்வதற்குப் பொதுமக்களுக்கு உரிமையுண்டு. தேர்தல் காலங்களில் துண்டுப்பிரசுரங்களை வெளியிடவும் கருத்துக்களைக் கூறவும் அரசியல் கூட்டங்களை நடத் தவும் சுதந்திரம் காணப்படும்.

ஈ) தேர்தலின்போது அரசியல் கட்சிகள் முன்வைக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கிணங்க (தாம் பதவிக்கு வந்தால் தமது ஆட்சியின்போது எம் முறைகளைப் பின்பற்றுவோம் என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த முன்வைக்கும் திட்டம் தேர்தல் விஞ்ஞாபனமாகும்) மக்கள் தாம் விரும்பும்கட்சிக்கு வாக்களிக்கும் சுதந்திரம் காணப்படல் வேண்டும்

**அரசியல் சுதந்திரத்தின் மூலம் உருவாக்கப்படும் அரசாங்கக் கட்சியும் எதிர்க் கட்சியும்**

1. ஜனநாயகம் எனப்படுவது பெரும்பான்மைக் கருத்தின் படி செயற்படும் ஓர் ஆட்சி முறையாகும்.
2. சர்வஜன வாக்குரிமைப்படி பெரும்பான்மை மக்களின் விருப்பத்தைப் பெற்ற கட்சி அரசாங்க க் கட்சியாகும்.
3. அரசாங்கக் கட்சி பெற்ற விருப்பத்தை விடக் குறைவான விருப்பத்தைப் பெற்ற கட்சி அல்லது கட்சிகள் எதிர்க்கட்சிகள் எனப்படும்.
4. அரசாங்கக் கட்சியும் எதிர்க்கட்சியும் மாறான கருத்துக்களைச் சகிக்கும் பண்பு அக்கருத்துக்கள் பற்றிச் சிந்தித்தல் ஆகியன ஜனநாயக நாட்டுக்கு முக்கிய பண்புகளாகும்.
5. அரசாங்கக்கட்சி எதிர்க்கட்சியின் கருத்துக்களைச் செவிமடுப்பதைப் போலவே எதிர்க்கட்சியும் பயனுறுதி வாய்ந்த கருத்துக்களையே முன் வைக்க வேண்டும். அரசாங்கக் கட்சியின் சகல திட்டங்களையும் எதிர்ப்பதுதான் எதிர்க்கட்சியின் கடமையாக இருத்தல் கூடாது.
6. மக்களாட்சியில் தீர்மானங்கள் பெரும்பான்மை வாக்குகளின் அடிப் படையில் எடுக்கப்படுகின்றனவாயின் மற்றவர்களுடைய கருத்துக்கள், அபிப்பிராயங்கள் முதலியவற்றைச் செவிமடுத்துக் கவனித்துச் செயற் படுதல் அரசாங்கக் கட்சியினதும் எதிர்க்கட்சியினதும், கடப்பாடாகும்.

**2. பொருளாதாரச் சுதந்திரம்**

1. நாட்டின் சட்டங்களுக்கு அமையவும் , மற்றவர்களின் சுதந்திரத்தைப் பாதிக்காத வகையில் தாம் விரும்பிய எந்தவொரு தொழிலைச் செய்யவும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் எவருக்கும் சுதந்திரம் உண்டு.



2. உழைப்புக்கேற்ற ஊதியம், தொழிற் பாதுகாப்பு, என்பனவும் இங்கு வழங்கப்படல் வேண்டும்.
3. தனிப்பட்ட சொத்துக்களையும், பணத்தைச் சேமிக்கவும் குடியாட்சியில் மக்களுக்குசுதந்திரமுண்டு (ஆனால் இவை ஏனையவர்களின் சுதந்திரத் தைப்பாதிக்காத வகையில் இருத்தல் வேண்டும்.)
4. தொழிற் சங்கங்கள் அமைக்க, அதில் சேர உரிமை உண்டு.

**3. சமய சுதந்திரம்**

விரும்பிய சமயத்தைப் பின்பற்றவும், பிரசாரம் செய்யவும், போதிக்கவும் குடிகளுக்கு சதந்திரம் உண்டு.
மேற்குறித்த விடயங்கள் ஒரு ஜனநாயக நாட்டில் உறுதிப்படுத்தப் பட்டிருக்கும் என எண்ண இடமுண்டு.

**ஜனநாயகம் வெற்றிகரமாகச் செயற்படுவதற்குத் தேவையான நிலைமைகள்**

1. மக்களிடையே மிக உயர்ந்த அளவில் நேர்மையும் பரஸ்பர மரியாதையும் இருத்தல்வேண்டும். மக்கள் தங்களுக்காக மட்டுமல்ல மற்றவர்களுக் காகவும் நீதியை நிலை நாட்ட முன்வர வேண்டும். சட்டத்திற்கு முன் அனைவரும் சமமானவராகக் கருதப்படல் வேண்டும்.
2. பெரும்பாலானோரின் கருத்துக்களை ஏற்பதோடு சிறுபான்மையின ரின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கவும் வேண்டும்.
3. மக்கள் முழுச் சமுதாயத்தினதும் நலனில் அக்கறை காட்டுதல் வேண்டும்.
4. .உறுதியானதும் ஆற்றலுடையதுமான பொதுசன அபிப்பிராயம் நிலவு தல் வேண்டும்.
5. பூரண அரசியல் சுதந்திரம் தேவை.
6. வளர்ச்சியடைந்ததொரு பொருளாதாரம் ஜனநாயகத்தின் செயற் பாட்டுக்கு அவசியமான மற்றுமொரு அம்சமாகும்.
7. நாட்டு மக்களுக்கிடையே ஒற்றுமை நிலவுதல் அவசியம்.
8. சிறப்பான தலைமைத்துவம் அவசியம்.

**ஜனநாயகம் தோல்வியடைவதற்கான காரணங்கள்**

1. பாரம்பரிய அரசியற் சட்ட அமைப்பினுள் பயன் தரும் அரசியற் தலைமை உருவாகும் ஆற்றலின்மை.
2. பலவீனமுள்ள நிர்வாக அதிகாரிகளுக்கெதிரான எதிர்ச் செயல்கள்.
3. கடுமையான பொருளாதார இடர்பாடுகள் உ+ம் (வேலையில்லாப் பிரச்சினை)
4. அடிப்படை விடயங்களில் உடன்பாடின்மை.
5. பொது விவகாரங்களில் மக்கள் அக்கறை காட்டாதிருத்தல்.
6. ஜனநாயகத்திற்கு அவசியமான, நன்கு வளர்சியடைந்த பாரம்பரியங்கள் இல்லாதிருத்தல்.
7. மக்களிடையே ஒழுக்கக்கேடும் , பயனற்ற தன்மை பற்றிய உணர்ச்சியும் நம்பிக்கை இழந்த நிலையும்

## வினா _ 17

அ) அரசும் அரசாங்கமும்
ஆ) அரசும் சமூகமும் பற்றிக் குறிப்புரை எழுதுக.

### விடைக்குறிப்புக்கள்

**அ) அரசும் அரசாங்கமும்**

முழுச் சமுதாயத்துக்கும் பொதுவான சில நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு அமைக்கப்பட்ட பெருஞ் சங்கமே அரசாகும் அரசாங்கத்தினூடாகவே மக்களால் இந் நோக்கங்களை அடைந்து கொள்ள முடியும். அரசின் முக்கிய கூறுகளுள் ஒன்றே அரசாங்கமாகும். அரசாங்கம் என்பது சட்டத்துறை நிர்வாகத்துறை, நீதித்துறை எனும் மூன்று அமைப்புக்களை உடையது.

அரசிற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான வேறுபாடுகளைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

| அரசு | அரசாங்கம் |
|---|---|
| 1. பரந்தது (சகல மக்களையும் உள்ளடக்கியது). | குறுகியதுசில பிரஜைகளின் குழுவாகும் |
| 2. முழுமையானது 4 கூறுகளை கொண்டது. | 1/4 மட்டுமே அரசின் ஒரு பகுதி. |
| 3. அதிகாரம் முழுமையானதும் அசலானதுமாகும். | அரசிலிருந்து பெறப்பட்ட சில வரையறுத்த அதிகாரமே. |
| 4. இறைமையுடையது | இறைமை அரசின் சார்பிலே செயல் படுகிறது. |
| 5. நிரந்தரமானது | தற்காலிகமானது (தேர்தல் புரட்சி இராணுவ சக்தி மூலம் கவிழ்க்கப்படும்.) |
| 6. பல அமைப்பு முறைகளில்லை | பல அமைப்புக்கள் (உ+ம் ஜனநாயகம் சர்வாதி காரம் போன்ற அமைப்புக்கள். கெபினட் ஜனாதிபதி போன்ற ஆட்சி முறைகள் |
| 7. அரசுக்குஅடிபணிவு முக்கியம் | ஜனநாயக முறையில் குறை நிறைகளை விமர்சிக்கலாம் |
| 8. கற்புலனீடற்றது | கற்புலனீடுள்ளது |



**ஆ) அரசும், சமூகமும்.**

சமூகம் என்பது தமது பொதுப் பிரச்சினைகளைப் பொதுச் செயற்பாட்டின் மூலம் தீர்த்துக்கொள்ள முயலும் சுதந்திரமான மனிதக் குழுவாகும். அரசு என்பது அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த சமூகத்தாபனமே ஆகும்.
ாபத

இவை இரண்டுக்குமிடையிலான வேறுபாடுகளைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

| அரசு | சமூகம் |
|---|---|
| 1. சமூகத்திற்குப் பின் தோன்றியது. | அரசுக்கு முன் தோன்றியது. |
| 2. ஒழுங்கமைப்பு முக்கியம். | முக்கியமில்லை (சமூகம் ஒழுங்கமைந்தும் இருக்கலாம், ஒழுங்கமையாமலும் இருக்கலாம் நாகரீகமாகவும் இருக்கலாம் நாகரீகமற்றதாகவும் இருக்கலாம்) |
| 3. சமூக ஒழுங்கிற்கு முக்கிய கருவியாக இருப்பினும் சமூகத்தின் ஒரு சிறிய பகுதியே. | சமூக உறவுகளின் முழுமையான விளைவு. |
| 4. அரசியல் சங்கம் மட்டுமே | பல சங்கங்களின் சங்கமம். |
| 5. செயற்கையானது | இயற்கையானதும் இயல்பானதும். |
| 6. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதே பிரதான கடமை. | இது கவனம் செலுத்தாத எந்தப் பகுதியையும் காண முடியாது. |
| 7. ஆள்புலத்திற்குட்பட்டது. | அகில ரீதியானது, வியாபகமானது |
| 8. இறைமையுடையது எனவே சட்டத்தைப் பிரயோகிக்க பலவந்த சக்தியையும் பயன் படுத்தும் | இறைமையற்றது. தனது விதிகளை வேண்டுகோள் விடுப்பதன் மூலம்மும், நம்பிக்கைகளினாலுமே செயற்படுத்துகின்றது. |

இவ்வாறாக இரண்டுக்குமிடையே பல வேறுபாடுகள் காணப்பட்டாலும் கூட இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாகும்.
விளக்கமாகச் சொன்னால் :-

* உயர்பீடமான அரசு நிலைத்து நிற்கும் அடித்தளமே சமூகம்
* இது பற்றி பார்க்கர் என்னும் அறிஞர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் சமூகம் அரசுடன் அரசில் செயற்படுகின்றது இவ்வாறு ஒன்று பட்டுச் செயற்படாவிடின் இஸ்தம்பித்து விடும்.

**சமூகம்**

பலகையிலான ஒரு பீப்பா கொண்டிருக்கும் பலகைகளுக்கு ஒப்பானது.

**அரசு**

அப்பலகைகளை அவற்றிற்குரிய இடத்தில் இணைத்து வைக்கும் இரும்பும் பட்டத்திற்கு ஒப்பானது.

## வினா - 18

**அ) அரசியல் திட்டமென்றால் என்ன?**
**ஆ) அரசியல் திட்டத்தை எவ்வாறு வகைப்படுத்த முடியும்?**

### விடைக்குறிப்புக்கள்

1. அரசறிவியல் ஆய்வுக்குட்படும் முக்கிய விடயங்களில் ஒன்றாக அரசியல் திட்டம் காணப்படுகின்ற போதிலும் கூட இது தொடர்பான திட்ட வட்டமான வரைவிலக்கணங்களைக் கூறமுடியாதுள்ளது.
2. பொதுவாக அரசு ஒன்றின் அரசாங்கத்துடைய அமைப்பு, அதிகாரம், தொழிற்பாடு ஆகியவற்றையும் அவ்வரசின் எல்லைக்குட்பட்ட மக்களின் உரிமைகளையும், கடமைகளையும் அம் மக்களுக்கு மிடையிலான உறவு களையும், தொடர்புகளையும் தெளிவாக விளக்கும். அரசாங்கத்திற்கும் தொகுப்பே அரசியல் திட்டமெனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.
3. இங்கு குறிப்பிட்ட ஓர் அரசின் அரசாங்கம் எவ்வாறு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் அவ் அரசாங்கத்தின் பிரதான நிறுவனங்களான சட்டம் நீதி, நிர்வாகம் ஆகிய துறைகள் எவ்விதம் ஒழுங்கு படுத்தப்படல் வேண்டும். இத்துறைகள் ஒவ்வொன்றினதும் அதிகாரங்களின் பிரயோகம் எத்தகையது? இவற்றிற்கும் மக்களுக்குமிடையிலான தொடர்புகள் எவ்வாறு அமைதல் வேண்டும் மக்கள் தம் உரிமைகளை எவ்வாறு நிலை நிறுத்திக்கொள்வர் போன்ற விடயங்களைத்தெளிவா கவும் சுருக்கமாகவும் விளக்கும் ஒரு சாதனமாக அரசியல் திட்டத்தை விளக்கலாம்.
4. அரசியல் திட்டம் தொடர்பாக முன் வைக்கப்பட்டுள்ள சில வரை விலக்கணங்களைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

அ) சட்டத்தினால் சட்டத்தினூடாக நிறுவப்பட்ட அரசியல் சமூகம் ஒன்றின் வடிவமே அரசியல் திட்டமாகும். அதாவது நிச்சயமான உரிமைகளுடனும் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பாடுகளுடனும் கூடிய நிலையான நிறுவனங்களைச் சட்ட ரீதியாக நிறுவிக் கொண்ட சமூக அமைப்பே அரசியல் திட்டமெனலாம். - ஜேம்ஸ் பேர்க்கஸ்-

ஆ) அரசாங்கத்தின் அமைப்பையும் தொழிற் பாடுகளையும் கடமைகளை யும் கூறும் தொகுப்பே அரசியல் திட்டம் அல்லது அரசியல் யாப்பு எனப்படுகின்றது.

### ஆ) அரசியல் திட்டங்களை வகைப்படுத்தல்

1. நவீன அரசுகளின் அரசியல் திட்டத்தினை வகைப்படுத்தும் போது பின் வரும் விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படுகின்றன.
   அ) அரசின் தன்மை ஆ) அரசியல் திட்டத்தின் தன்மை
   இ) அரசாங்க நிறுவனங்களின் தன்மை (சட்டம், நிர்வாகம்,நீதி)

இத்தகைய அணுகுமுறைகளின் கீழ் அரசியல் திட்டத்தினை வகைப் படுத்தியவர் அமெரிக்க அரசியல் அறிஞரான **வில்லோபி** என்பவராவார்.



2. அரசாங்க அமைப்புக்களில் காணப்படும் விசேட வேறுபாடுகளை அடிப் படையாக கொண்டே அரசியல் திட்டங்களை வேறுபடுத்த வேண்டு மென்று இவர் குறிப்பிடுகின்றார்.

### அரசின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தல்

உலகில் காணப்படும் அரசின் தன்மைக்கேற்ப அரசியல் திட்டமானது பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது.

* ஒற்றையாட்சி அரசியல் யாப்பு
* சமஷ்டியாட்சி அரசியல் யாப்பு

பொதுவாக அரசாங்கமொன்றின் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திடம் மாத்திரம் குவிக்கப்பட்டிருப்பதால் இதனை ஒற்றையாட்சியென அழைப்போம் அதே நேரம் அதிகாரங்கள் மத்திய அரசிற்கும் மானில அரசிற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தால் இதனைச் சமஷ்டி அரசியல் யாப்பு என்போம்.

### அரசியல் திட்டத்தின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தல்

* எழுதப்பட்ட யாப்பு. எழுதப்படாத யாப்பு.
* நெகிழும் யாப்பு. நெகிழாயாப்பு.

ஒரு நாட்டின் அரசாங்கத்தினதும், அரசாங்கத்தின் நிறுவனங்களினதும் கடமைகள் தொழிற்பாடுகள் என்பன ஆவன ரீதியாக எழுதப்பட்டு தொகுக்கப்பட்டிருப்பின் இதனை எழுதப்பட்ட யாப்பு என அழைக்கின்றோம்.

அதே நேரம் பிரித்தானியாவில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஆவனரீதியாகத் தொகுக்கப்படாமல் நீதிமன்றத் தீர்ப்புகளினாலும் பாராளுமன்ற சட்ட மூலங்களாலும் மரபுகள் வழக்காறுகள் என்பவற்றாலும் வகுக்கப்பட்டிருப்பின் எழுதப்படாத யாப்பு என்று அழைக்கின்றோம். எனவே எழுதப்படாத யாப்பு எனும் போது ஆவனரீதியாக எழுதித் தொகுக்கப்படாத யாப்பு எனக் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும் (பிரித்தானியாவின் யாப்பு எழுதப்படாத யாப்பாக இருப்பினும் கூட நீதிமன்றத் தீர்ப்புகள் சட்ட மன்றச் சட்டங்கள் மரபுகள் வழக்காறுகள் என்பன எங்கோ ஒரு இடத்தில் எழுதப்பட்டே இருக்கும் உதாரணமாக பாராளுமன்ற சட்டங்கள் ஹன்சாட் டில் எழுதப்பட்டிருக்கும் எனவே தான் எழுதப்படாத அரசியல் யாப்பு என்ற விடயத்தில் அரசியல் திட்ட வாதிகள் அவதானத்துடன் செயல்படுவதைக் காண முடியும்.

### நெகிழும் நெகிழா யாப்புக்கள்

சாதாரண பெரும்பான்மையால் யாப்பை மாற்றியமைக்க முடியுமாயின் இதனை நெகிழும் யாப்பு என்றும், விசேட முறைகளின் மூலமாகவே யாப்பை மாற்றியமைக்க வேண்டியிருப்பின் இதனை நெகிழா யாப்பு என்றும் அழைக்கின்றோம். உதாரணமாக இலங்கையில் காணப்படுவது நெகிழாயாப்பு ஆகும் காரணம் 2/3 பெரும்பான்மையுடன்தான் யாப்பினை மாற்றியமைக்க வேண்டியிருக்கும்..

இவ்வாறான வகைப்படுத்தல்கள் பொதுவானதாகும். இன்னும் சில அறிஞர்கள் யாப்புக்கள் எழுதப்படும் நிலைப்பாட்டை மையமாகக் கொண்டு **திணிக்கப்பட்ட யாப்பு, திணிக்கப்படாத யாப்பு** என்றும் வகைப்படுத்துவர். அதாவது ஒரு நாட்டின் அரசியல் திட்டமானது வேற்று நாட்டு ஒருவரால் அல்லது ஒரு குழுவால் எழுதப்பட்டு அந் நாட்டுக்குள் திணிக்கப்படுமாயின் அது திணிக்கப்பட்ட யாப்பு எனப்படும்.

உ+ம் : இலங்கையில் சோல்பரி யாப்பு.

சுதேச மக்களே தமது இறைமை சுதந்திரம் போன்றவற்றைப் பயன்படுத்தித் தாமே தமது யாப்பைத் தயாரித்திருந்தால் அத்தகைய யாப்பு திணிக்கப்படாத யாப்பு எனப்படும்.

உ+ம் 1ம் 2ம் குடியரசு யாப்புகள்.

## வினா _19

**அ) ஒற்றையாட்சி என்றால் என்ன?**

**ஆ) ஒற்றையாட்சி முறை குறித்துக் கூறப்பட்டுள்ள சாதக, பாதக கருத்துக்கள்பற்றி கருத்துரை வழங்குக.**

### சுருக்க விடைக் குறிப்புகள்

அரசொன்றின் அரசியற் திட்டம் மத்திய அரசாங்கத்தை மட்டும் அங்கீகரித்து நாட்டின் ஆட்சிப்பொறுப்பை அவ்வரசாங்கத்திடம் மட்டுமே ஒப்படைக்கப்பட்டிருப்பின் இவ்வாட்சி முறை ஒற்றையாட்சி Unitary என அழைக்கப்படும் (உதாரணமாக இலங்கை, பிரித்தானியா, பெல்ஜியம், நியுஸிலாந்து, டென்மார்க் போன்ற நாடுகள்)

பேராசிரியர் டைசி ஒற்றையாட்சி பற்றிப் பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்தியுள்ளார் ஒரு நாட்டின் சட்டம் இயற்றும் அதிகாரம் அனைத்தும் ஒரு மத்திய அரசினால் மேற்கொள்ளப்படுமாயின் அது ஒற்றையாட்சி முறை எனப்படும்.

இங்கு இறைமை அதிகாரம் பிரிக்கப்பட்டிருக்க மாட்டாது. அதிகாரம் மத்திய அரசிடம் மாத்திரமே குவிந்திருக்கும் இங்கு காணப்படும் உள்ளூராட்சி அமைப்புக்கள் மத்திய அரசு வழங்கிய அதிகாரங்களை மட்டுமே செயற்படுத்தும். மத்திய அரசு விரும்பும் நேரத்தில் இந்த அதிகாரங்களைப் பிரித்துவிடவோ அன்றேல் மாற்றியமைத்துவிடவோ முடியுமானதாக இருக்கும்.

ஸீ.எப். ஸ்டிராவ் எனும் அறிஞர் ஒற்றையாட்சிக்கு இன்றியமையாத விடயங்களாக பின்வருவனவற்றை வரையறை செய்கின்றார்.

அ) மத்திய பாராளுமன்றத்தின் உயர் அதிகாரம்.

ஆ) இறைமையைச் செலுத்தக் கூடிய துணைக்குழுக்கள் இன்மை.



**ஆ) ஒற்றையாட்சி முறை குறித்து கூறப்பட்டுள்ள சாதக, பாதக கருத்துக்களை சுருக்கமாகப் பின்வருமாறு குறிப்பிடலாம்.**

**சாதக கருத்துக்கள் (நன்மைகள்)**

1. இது நிர்வாகப் பலம் பொருந்திய அமைப்பு.
2. இங்கு தேசப்பற்று கூறுபடாது.
3. எளிமையான அமைப்பு.
4. சிக்கன மிக்க அமைப்பு.
5. சிறந்த வெளிநாட்டுக் கொள்கைகளை வகுக்கக் கூடிய அமைப்பு.

**பாதக கருத்துக்கள் (குறைபாடுகள்)**

1. மத்திய அரசாங்கத்திடம் அதிகாரம் குவிக்கப்பட்டிருப்பதால் சர்வாதிகாரம் தோன்ற இடமுண்டு.
2. நாடுகள் சிறியதாக இருப்பதனால் அந்நிய ஆக்கிரமிப்புக்கு உட்படக் கூடிய இலகுவான வாய்ப்புண்டு (உதாரணமாக அண்மையில் குவைட்டை, ஈராக் ஆக்கிரமித்தமை)
3. பொருளாதார அபிவிருத்தி தடைப்படலாம்.
4. பல இனமக்கள் வாழும் சந்தர்ப்பத்தில் சிறுபான்மை இனங்கள் பாதிப்படையலாம்.

## வினா _ 20

**அ) சமஷ்டி அரசாங்கங்களின் நெருக்கடிகளைக் கூறுக.?**

**ஆ) சமஷ்டி ஆட்சிமுறை ஏற்படக்கூடிய காரணிகள் யாவை?**

**இ) சமஷ்டி ஆட்சிமுறையின் நன்மைகளை இனம் காண்க.**

**ஈ) சமஷ்டி ஆட்சிமுறையின் தீமைகள் யாவை?**

### சுருக்க விடைக்குறிப்புகள்

சமஷ்டியாட்சி (Federal State) அல்லது கூட்டாட்சியைக் குறிக்கும் (Federalism) என்ற ஆங்கிலப்பதமானது இலத்தீன் சொல்லான (Foedus) என்பதிலிருந்து பிறந்ததாகும். Foedus என்பது நட்பு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தம் அல்லது உடன் படிக்கை என்று பொருள்படும். சமஸ்டியாட்சி முறையானது அண்மைக்காலங்களில் முக்கியப்படுத்தப்படும் ஓர் அரசியல் முறையாக விளங்கிக் கொள்ளப்பட்டாலும் கிரேக்க நகர அரசுகளில் அடையாளம் காணப்படக்கூடிய அளவுக்கு மிகப் பழைமையானது என்பதுடன் மேற்குத்தேச வரலாறுகளிலும் இதன் சாயல்களைப் பிரதிபலிக்கும் நிறுவனங்களை அடையாளம் கண்டு கொள்ள முடியும்

**சமஸ்டி பற்றிய வரைவிலக்கணங்கள்**

1. தேசிய ஒற்றுமையையும் அதிகாரத்தையும் மானில உரிமைகளின் பாதுகாப்பினையும் பொருந்தச் செய்யும் அரசியல் வழிமுறையே சமஸ்டியாகும். - பேராசிரியர் டைசி -
2. பல நாடுகள் ஒன்று சேர்ந்து ஒரு புதிய நாட்டினை அமைக்கும் முறையே சமஷ்யாகும். – ஹமில்டன் –
3. நாடுகள் குறுநிலப்பகுதி மானிலங்கள், குடியரசு எனப் பலவிதமாக உரைக் கப்படும். சமஸ்டியின் உறுப்புக்களுக்கும். மைய அரசுகளுக்குமிடையி லான அதிகாரப் பங்கீடு சமஸ்டி எனப்படும். - ஜே.டப்ளியு கானர் --

எனவே இவற்றைத் தொகுத்து நோக்கும் போது சமஸ்டியென்றால் என்ன என்ற வினாவிற்கு பின்வருமாறு விடை தரலாம். **மத்திய அரசொன்றின் தலைமையின் கீழ் சிறிய அரசுகளும் பிரதேசங்களும் தமது சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் இழந்துவிடாத முறையில் சில பொது நன்மைகளை எய்வதை நோக்காகக் கொண்டு அதிகாரப் பங்கீடு ஏற்பாட்டின் அடிப்படையில் இயங்கும் ஆட்சி முறையானது சமஸ்டி ஆட்சி முறை எனப்படும்.** (உதாரணமாக ஐக்கிய அமெரிக்க நாடுகள், சுவிட்சர்லாந்து, கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா, ஜேர்மன்.... போன்ற நாடுகள்)

இவ்வரசியல்திட்டம் அதிகாரப்பங்கீட்டினைத்தெளிவாக வலியுறுத்துவதன் மூலமே ஒற்றையாட்சி அரசியலமைப்பிலிருந்து பிரதான மாக வேறுபடுகின்றது.

சமஷ்டியாட்சி முறையின் பிரதான பண்புகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. ஓர் எழுதப்பட்ட யாப்பு.
2. ஒரு நெகிழாயாப்பு.
3. ஓர் உயர் நீதிமன்றம்.
4. ஓர் இரண்டாம் மன்றம்.

**அ) சமஸ்டிமுறை அரசாங்கத்தின் நெருக்கடிகள்**

சமஸ்டி அரசாங்க முறையானது ஒற்றையாட்சி அரசாங்க முறை போன்று இல்லாமல் சிக்கல் மிக்க ஒரு வகை ஆட்சி முறையாக இருப்பதால் பல பிரச்சினைகளை அது எதிர்நோக்க வேண்டியதாக இருக்கிறது. இவற்றுள் பின் சொல்லப்படுபவை மிகவும் அடிப்படையானவையாகும்.

1. திருப்திகரமான அதிகாரப் பங்கீடு. (A Staisfactory Division Of Power)
2. பெரிய அலகுகளின் மேலாக்கத்திற்கெதிராக சிறிய அலகுகளைப் பாதுகாத்தல் (Protection of the Smallar Units againt Dominance By the Larger)
3. மத்திய மானில அரசாங்க அமைப்புகளுக்கிடையிலான உறவுகள். (Organization of the Relation between the Centre and Units)
4. பிரிந்து செல்லும் உரிமை . (Right of Secession)



**ஆ) சமஷ்டி ஆட்சிமுறை ஏற்படக்கூடிய காரணிகள்.**

1. **இராணுவப் பாதுகாப்பு**
2. அந்நிய வல்லரசுகளின் ஆதிக்கத்தில் அடங்கி இருக்காது சுதந்திரம் பெற வேண்டும் என்ற உணர்வு அத்திலாந்திக் கரையோரமாக அமைந்திருந்த பிரித்தானியாவின் பதின்மூன்று குடியேற்றங்களும் ஐக்கிய அமெரிக்கா வாக உருவானமை.
3. பொருளியல் ரீதியாக ஒரு அபிவிருத்தியை எதிர் நோக்கல் (உதாரணம் : கனடா)
4. புவியியல் ரீதியாக ஏற்படும் இணைப்பு (உதாரணம் : அவுஸ்திரேலியா)
5. ஒரே இன மக்கள் ஆனால் பல மொழி பேசுபவர்கள். (உதாரணம் : சுவிற்சர்லாந்து)
6. பல இன மக்கள் (உதாரணம் : இந்தியா)
7. விசாலமான பரப்பும் அதிக சனத்தொகையும். (உதாரணம் சோவியத் ரஷ்யா)

**இ) சமஸ்டியாட்சி முறையின் நன்மைகள் (சாதக கருத்துக்கள்)**

1. ஒற்றுமைக்கும் வேற்றுமைக்குமிடையில் சமநிலை ஏற்படுதல்.
2. அதிகாரப் பிரிவினை.
3. சர்வாதிகார மனப் போக்குகளைத் தடை செய்தல்.
4. பாதுகாப்பு - (சிறிய பிரதேசங்கள் பயனுறுதி வாய்ந்த வகையில் தம்மைத் தாமே பாதுகாக்க முடியும்)
5. பொருளாதார விருத்தி - அபிவிருத்தி துரிதப்படல்.
6. நீதித்துறையின் சுதந்திரம்.
7. சிறந்த முறையில் வெளிநாட்டு உறவுகளைப் பேண முடிந்தமை.

**ஈ) சமஸ்டியாட்சி முறையின் தீமைகள் (பாதக கருத்துக்கள்)**

1. எளிமையற்ற அமைப்பு.
2. அதிக நிர்வாகச் செலவு.
3. அடிக்கடி தோன்றும் பிணக்குகள் (மானில --மானில, மத்திய-மானில).
4. தேசப்பற்று கூறுபடல் (இது ஒருங்கமையவாற்று உணர்வைச் சிதைக்க வல்லது)
5. வெளிநாட்டுக் கொள்கைகள் வகுப்பதில் மாநில அரசுகளுக்கு உரிமை அற்ற நிலை.
6. அரசியலமைப்புத் திருத்த முறையில் காணப்படும் நெகிழாத்தன்மை (ஐக்கிய அமெரிக்காவில் 206 வருடங்களிலும் இது வரை 26 திருத்தங்கள் மாத்திரமே கொண்டுவரப்பட்டுள்ளன).
7. சட்டங்களின் வேறுபாடுகள் (மானில மத்திய சட்டங்கள்).
8. இரட்டை வரி (பொது மக்களுக்கு சுமை).
9. பலங்குன்றிய அரசாங்கம்.

## வினா - 21

அ) சட்டம் என்றால் என்ன?
ஆ) சட்டத்தின் ஆதாரங்கள் யாவை?
இ) சட்டத்தின் வகைப்படுத்தல்களைக் குறிப்பிடுக.

### சுருக்க விடைக் குறிப்புக்கள்

அ) அரசியலில் ஆக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் கட்டுப்பாடுகள் உரிமைகளின் பாதுகாப்பு ஆகியவற்றின் தொகுப்பை சட்டம் என கிரீன் எனும் அறிஞர் வரையறை செய்கிறார்.

நாட்டில் நடைபெறும் மக்களின் நல்வாழ்விற்கும் பாதுகாப்பிற்கும் அரசு சட்டத்தின் மூலமாக முக்கிய பாதுகாப்பினை வழங்குவது கடமையாகிறது. மக்களின் மீது கட்டுப்பாடுகளை விதித்து ஒழுங்குபடுத்துவதன் மூலம் அரசு மக்களின் அமைதியான வாழ்விற்கு வலுவூட்டுகிறது. முறையான செயல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. சமூக விதிகளுக்கு உயிரூட்டி முறைப்படி கடைப்பிடிக்க வழி வகுக்கிறது.

**ஆ) சட்டத்தின் ஆதாரங்கள்**

சட்டத்திற்கு ஆறு ஆதாரங்கள் காணப்படுகின்றன என ஹாலந்து எனும் அறிஞர் வரையறை செய்கின்றார்.

1. **வழக்காறுகள்.** (மக்களிடையே நிலவும் சில வழக்கங்கள் காலகதியில் சட்டங்களாக மாறும்)
2. **நீதிமன்றத் தீர்ப்புக்கள்.** (வழக்குகள் நடைபெற்று அதன் விளைவாக வழங்கப்படும் நீதிமன்றத் தீர்ப்புகள் சட்டங்களுக்கு ஆதாரமாக அமைகின்றன)
3. **சமயம்.** சமயத்தின் அடிப்படையிலும் சட்டங்கள் தொகுக்கப்படுகின்றன. (உதாரணமாக அரபு நாடுகள் குர்ஆனை அடிப்படையாகக் கொண்டு சட்டங்கள் ஏற்படுத்தியுள்ளமை)
4. **நியாயமுறையில் அமைந்த நீதி.**
   சந்தர்ப்பம் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படும் குற்றங்களுக்கு நெகிழ்வான முறையில் வழங்கப்படும் தீர்ப்புகள் (உதாரணம் : தற்பாதுகாப்புக் கொலை)
5. **அறிவியல் கருத்துக்கள்**
   காலமாற்றங்களுக்கு இணங்க ஏற்படக்கூடிய புதுப்புது அம்சங்களுக்கு சட்ட அறிஞர்கள், மார்க்கமேதைகள் புத்திஜீவிகள் வழங்கும் தீர்ப்புகள் (உதாரணம் : பரிசோதனைக் குழாய்க் குழந்தை தொடர்பாக அரபு நாடுகள் ஏற்றுள்ள சட்ட விதிகள்)
6. **சட்டத்துறை.** நாட்டின் கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றிக்கும் பிறவற்றிக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு சட்ட மன்றங்களின் மூலம் இயற்றப்படும் சட்ட மசோதாக்கள்.

**இ) சட்டத்தின் வகைப்படுத்தல்**

1) அரசியலமைப்புச் சட்டம். 2)சாதாரண சட்டம். அ) பொதுச்சட்டம்
ஆ) தனியார்சட்டம். 3)அவசர காலச்சட்டம். 4)உள்நாட்டுச் சட்டம்.
5)வழக்குத்தொடர்புடையசட்டம்.6)ஆட்சித்துறைச்சட்டம் 7) சர்வதேச சட்டம்.



## மாணவர்கள் பின்வரும் வினாக்களுக்கு ஆயத்தமாகிக்கொள்ளவும்.

1. அ) அரசறிவியல் என்பது அரசு பற்றிய ஆய்வாகும்.
   ஆ) அரசறிவியல் என்பது அதிகாரம் பற்றிய ஆய்வாகும். விமர்சிக்குக.
2. சமஷ்டி அரசாங்க முறை, ஒற்றையாட்சி முறை ஆகியவற்றிற்கு ஆதரவாகவும், எதிராகவும் கருத்துரை வழங்குக.
3. சட்டத்திற்கு நாம் ஏன் அடிபணிய வேண்டும்?
   அ) அது இறையின் ஆணை என்பதால்
   ஆ) அது மக்கள் சித்தத்தை உள்ளடக்குகின்றது என்பதால். ஆராய்க.
4. உரிமைகளை உறுதிப்படுத்தாத அரசு சர்வாதிகார அரசாகும். - விமர்சிக்குக.
5. "இறைமைக் கோட்பாடு நடைமுறைக்குப் பொருத்தமற்ற கோட்பாடாகும்" இக் கூற்றை நீர் ஏற்பீரா? உமது கருத்திற்கான நியாயங்களைத் தருக.
6. சுதந்திரமும் சமத்துவமும் ஒன்றிணைக்க முடியாதவை என்ற கருத்தை நீர் ஏற்பீரா? பின்வரும் தலைப்புக்களின் கீழ் விடை எழுதுக.
   அ) பொருளாதார சமத்துவமும் சுதந்திரமும்.
   ஆ) அரசியல் சமத்துவமும் சுதந்திரமும்.
7. ஒற்றையாட்சி அரசிற்கும், சமஷ்டி அரசிற்கும் இடையிலான வேறுபாடுகளை
   அ) அரசியலமைப்பு வகிக்கும் இடம்,
   ஆ) அரச அதிகாரத்தின் பங்கீடு ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.
8. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு பற்றி சிறுகுறிப்பெழுதுக.
   அ) அமுக்கக் குழுக்கள்
   ஆ) அரசு பற்றி சோசலிச கருத்து
   இ) கூட்டுப்பொறுப்பு
   ஈ) தாராண்மை வாதம்
   உ) எழுதப்பட்ட யாப்பு அல்லது நெகிழா யாப்பு
   ஊ) அரசியல் கலாசாரம்
   எ) அரசியல் வன்முறை
   ஏ) தெய்வ உரிமைக் கோட்பாடு
   ஐ) இலட்சிய வாதக் கோட்பாடு

# G.C.E.A/L
# G.A.Q.
# B.A

**புன்னியாமீன்**

ஆசிரியரின்

## Political Science

வகுப்புக்கள் நடைபெறுவது

**கண்டியில்**

**EPI**

**D.S.Senanayake Street,**
**KANDY.**

4216
e.C

**கொழும்பில்**

**EPI**

**64 - 2/2, HINNIAPPUHAMY MAWATHA,**
**KOTAHENA, COLOMBO-13.**

-&-

316, GALLE ROAD, BAMBALAPITIYA
COLOMBO-04

## புன்னியாமீன் ஆசிரியரின் பிறநூல்கள்

### இலக்கியநூல்கள்

| | | |
|---|---|---|
| 1. ❋ | தேவைகள் (சிறுகதைத்தொகுதி) | 3.75 |
| 2. ❋ | நிழலின் அருமை (பரிசுபெற்ற சிறுகதைத்தொகுதி) | 15.00 |
| 3. ❋ | இலக்கிய உலா(இலக்கியத் திறனாய்வு–இந்தியப்பதிப்பு) | 75.00 |
| 4. ❋ | இலக்கிய விருந்து (இலக்கியத்திறனாய்வு–இந்தியப்பதிப்பு) | 45.00 |
| 5. ❋ | அடிவானத்து ஒளிர்வுகள் (நாவல்–இந்தியப்பதிப்பு) | 75.00 |
| 6. ❋ | கிராமத்தில் ஒருதீபம் (வரலாறு) | |
| 7. ❋ | கரு (சிறுகதைத்தொகுதி) | 15.00 |
| 8. ❋ | நெருடல்கள் (சிறுகதைத்தொகுதி) | 15.00 |
| 9. ❋ | அந்தநிலை (சிறுகதைத்தொகுதி) | 15.00 |
| 10. | புதிய மொட்டுக்கள் (கவிதைத் தொகுப்பு) | 20.00 |
| 11. | அரும்புகள் (கவிதைத் தொகுப்பு) | 25.00 |
| 12. | யாரோ எவரோ எம்மை ஆள (சிறுகதைத்தொகுப்பு–இந்தியப்பதிப்பு) | |

### பாடநூல்கள்

| | | |
|---|---|---|
| 13 | வரலாறு(ஆண்டு 9) (5ம்பதிப்பு அச்சில்) | 32.50 |
| 14. | வரலாறு(ஆண்டு 10) 4ம்பதிப்பு அச்சில்) | 40.00 |
| 15. | வரலாறு(ஆண்டு 11) 4ம் பதிப்பு அச்சில்) | 40.00 |
| 16.❋ | சமூகக்கல்வி–1 (ஆண்டு–11) | 27.50 |
| 17.❋ | சமூகக்கல்வி–11 (ஆண்டு 10,11) | 25.00 |
| 18.❋ | அரசறிவியல் கோட்பாடுகள் (A/L,GAQ) | 40.00 |
| 19. | அரசியற் கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும் (A/L& GAQ)– 5ம்பதிப்பு | 65.00 |
| 20. | இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி (A/L & GAQ)– 4ம்பதிப்பு | 65.00 |
| 21. | தெரிவுசெய்யப்பட்ட நாடுகள்(A/L & GAQ)– 4ம்பதிப்பு | 70.00 |
| 22.❋ | இலங்கையின் கட்சிமுறைகளும், உள்ளூராட்சி முறைகளும் வெளிநாட்டுக் கொள்கைகளும் (A/L & GAQ) | 60.00 |
| 23. | இலங்கையின் தேர்தல்கள்– அன்றும் இன்றும் | 50.00 |
| 24. | '94 பொதுத்தேர்தலும் சிறுபான்மை இனங்களும் | 55.00 |
| 25. | '94 சனாதிபதித்தேர்தலும் சிறுபான்மை இனங்களும் | 70.00 |
| 26. | இலங்கையின் அரசியல் '95 (நிகழ்கால நிகழ்வுகள்) A/L & GAQ | 70.00 |
| 27. | பிரித்தானிய அரசாங்கமுறை A/L & GAQ- 5ம்பதிப்பு | 60.00 |

❋ அடையாளமிடப்பட்ட நூல்கள் கைவசமில்லை.

விபரங்களுக்கு

**P.M.Puniyameen, 14,Udatalawinna Madige, Udatalawinna-1212**